
**Book 6**

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்




## கம்ப்யூட்டர் :

சரியான நேரம் வரும்போது நாம் அவர்களுக்காக பூமியிலுள்ள பொருட்களாலான ஒரு படைப்பை வெளிப்படுத்துவோம். அது மனிதர்கள் நமது வசனங்களின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை அறிவிக்கும்.

**அல்குர்ஆன் : 27:82**


பிப்ரவரி
2000
February

**PUTHIYA NINAIVOOTAL**

TAMIL MONTHLY

# இறைவனால் அங்கீகரிக்கப்படாத மார்க்கம் (42:21)

இன்றைய இஸ்லாம் எந்தளவுக்கு பாழ்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை கீழ்கண்ட அட்டவணை காட்டுகிறது.

| <u>வரம்புமீறப்பட்ட புதிய கண்டு பிடிப்புகள்</u> | <u>குர் ஆனுடைய கொள்கைகள்</u> |
|---|---|
| 1. ஹதீஸ் மற்றும் சுன்னத் | 6:19,38, 114; 7:1, 2, 3; 12:111; 17:46; 31:6; 45:6; 65:38-47; மற்றும் பல |
| 2. மதத்தை விட்டு வெளியேறியவன், என்று இவர்கள் நினைப்பவர்களை கொல்வது | 2:286; 4:90; 10:99;18:29 88:21, 22 |
| 3. கடுமையான குற்றவியல் சட்டங்கள் | |
| 4. விபசாரம் செய்பவர்களைக் கல்லால் அடித்துக் கொல்வது | 24:2, 4:25 |
| 5. நான்காவது முறை மது அருந்துபவர்களைக் கொல்வது | 2:256; 18:29 |
| 6. தொழாதவர்களைக் கொல்லச் சொல்லும் சட்டம் | 2:256; 18:29 |
| 7. மாதவிடாய் பெண்களை வணக்க வழிபாடுகளிலிருந்து தடுப்பது | 2:222 |
| 8. முஹம்மது நபியின் விருப்பத்திற்கு மாறாக அவரை இணைவைப்பது | |
| a. அவர்தான் பெருமைமிக்க தகுதிகள் கொண்டிருக்கும் தூதர் என்றழைப்பது | 2:285 |
| b. அவர் தவறே செய்யாதவர் எனக் கருதுவது | 4:79; 9:117; 17:73-74; 33:37; 40:66; 66:1 80:1-10; 93:7 |
| c. அவருடைய சமாதியை "புனித பள்ளியாக" ஆக்கியது | 2:149-150 |
| d. பரிந்துரை செய்யும் சக்தி அவருக்கு இருப்பதாக கருதுவது | 2:48, 123, 253; 6:70, 94; 7:53; 10:3; 39:44 43:86; 74:48 |
| e. ஒரு குதிரையில் ஏறி ஒளி வேகத்தில் வானத்திற்குச் சென்றதாகவும் இறைவனுடன் பேசி 50 நேரத் தொழுகைகளை 5 நேரமாக மாற்றி பெற்றுக் கொண்டதாக, ஒரு அறிவுக்கு பொருத்தமற்ற கதையை கண்டு பிடித்தது. (ஒளியின் வேகத்தில் சென்றால் அவர் இது வரையிலும் பால்வெளி மண்டலத்தையே தாண்டியிருக்க முடியாது!) | 17:1; 53:1-18 |
| f. தொழுகையிலும், பாங்கிலும் அவர் பெயரைச் சேர்த்தது. | 20;14; 72:18 |

(தொடர்ச்சி பின் அட்டை)

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி


செய்தி 1

பிப்ரவரி 2000
நினைவு 1


குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர்
C.S. ரஃபியுதீன்



தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


★ வசனங்களுக்கு அரைகுறை விளக்கங்கள்
★ தாப்பத்துல் அர்ளு
★ தண்டனை தவிர்க்க முடியாதது
★ யூதர்களின் சதி
★ இறைவன் நேர் செய்ததும் சைத்தான் மாறு செய்ததும்
★ தூதர்களிடையே வேற்றுமை
★ குர்ஆனின் திறவுகோல்
★ கேள்வி பதில்கள்
★ Satan the Master Hypnotist

# அல்லாஹ்வின் வசனங்களுக்கு

## அரைகுறை அறிவிப்புகள் (ஹதீஸ்கள்) விளக்கமாக முடியுமா ?

இஸ்லாமிய பொது ஜனங்களை திசை திருப்புவதற்காக ஹதீஸ் மற்றும் சுன்னாவின் பக்த கோடிகளால், ஆலிம்களின் உதவி கொண்டு பிரயோகிக்கப்படும் தந்திரங்கள் இவைதான்

1 குர்ஆன் வசனங்களின் கருத் துக்களைச் சிதைப்பது.

2. அவற்றை அதன் கோர்வை யிலிருந்து துண்டிப்பது (Out of Context)

3. ஒரு வசனம் பிறிதொரு வசனத்தை மாற்றிற்று என்று வாதிடுவது.

இதனால் உண்டான ஷைத்தா னிய போதனைகள் அல்லாஹ்வின் மார்க்கத்தை ஒரு அரைகுறை சடங்குகளைக் கொண்ட சம்பிரதாய அவஸ்தைகளாய் மாற்றியுள்ளன.

அல்லாஹ் நாடினால், இங்கே நாம் அவர்களால் வெகுவாக திசை திருப்பப்படும் சில வசனங்களை ஆய்வு செய்வதன் மூலம் அவர்களின் உண்மையான சாயத்தை வெளுக்கச் செய்வோம்

அ) "அல்லாஹ்வின் தூதாடத்தில் உங்களுக்கு ஒர் அழகிய முன்மாதிரி இருக்கிறது" (33:21) என்ற வசனத்தை எடுத்துக் கொள்வோம்.

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللهِ اُسْوَةٌ
حَسَنَةٌ لِّمَنْ كَانَ يَرْجُوا اللهَ وَالْيَوْمَ
الْاٰخِرَ وَذَكَرَ اللهَ كَثِيْرًا

பொய்யர்கள், மத்திய கால அரபுகளின் கலாச்சாரத்தையும், நடைமுறைகளையும் தூதரின் அழகிய முன் மாதிரிகள் என காட்டியுள்ளனர். ஆயினும் இவ்வச னத்தின் கோர்வையினை நீங்கள் பார்க்கும் போது அது தூதரின் துணிவிலும், அவர், அல்லாஹ்வை விடாமல் நினைவு கூர்வதிலும் உள்ள அவரின் முன்மாதிரியை விவரிக்கும்.

இதனையே அவர்கள் கொஞ் சமும் பொருந்தாத தனிநபர் மற்றும் கலாச்சார ரீதியிலான பழக்க வழக்கங்களை விவரிப்பதாக எடுத்துக்கொண்டுள்ளனர்.

உதாரணமாக, தலைப்பாகை

அணிவதையும், தாடி வளர்ப்பதையும், புனிதம் என கருதும் படி செய்துள்ளனர். அப்போதும் அங்கே, மக்கத்து இணை வைப்பாளர்களான அபூஜஹ்லும், அபூலஹபும், வலித் பின் முகீரா போன்றோரும் தலைப்பாகை அணிந் திருந்ததையும் தாடி வளர்த்திருந் ததையும் - வசதியாக மறந்து விட்டார்கள் போலும்.

அதைவிடக் கொடுமை என்னவெனில், நடவடிக்கைகளாலும், வார்த்தைகளாலும் முன்மாதிரியிலிருந்து முற்றிலும் விலகி நிற்கக் கூடிய வகையில் ஹதீஸ்களில் முஹம்மது நபி விவரிக்கப் பட்டுள்ளார் என்பது தான்.

ஹதீஸ்கள் நபியை பன்முக தன்மைகள் கொண்ட ஒரு மாயஜால கதாபாத்திரமாக சித்தரித்துள் ள ன அதாவது புராணக் கதாபாத்திரங்களான தேவர்கள் மற்றும் தேவதைகள் போன்றவைகளுக்கும் அதிகப்படியாகவே ஹதீஸ்களில் சித்தரிக்கப் பட்டுள்ளார். ஓரிடத்தில் தெய்வீக தன்மை கொண்டவராகவும் மற்றோர் இடத்தில் சாமான்யராகவும் மேலும் கீழுமாக காட்டப்பட்டுள்ளார். ஞானம் மிக்கவராகவும், ஞானம் அற்றவராகவும் காட்டப்பட்டுள்ளார். ஒரு சில நேரங்களில் அல்லாஹ் வைவிட அதிகமாக கருணை உடையவராகவும் மற்ற சில நேரங்களில் குரூரமாக சித்திரவதை செய்பவராகவும் காட்டப்பட்டுள்ளார் மேலும் உன்னதமானவராகவும், குற்றவாளியாகவும்; பணி ந் த வராகவும் , பெருமை கொண்டவராகவும்; கற்பு மிக்கவராகவும், பெண் மோகம் உள்ளவராகவும்; நம்பகம் மிக்கவராகவும்; ஏமாற்றுக்காரராகவும், கல்லாதவராகவும்; கற்பிப்பவராகவும்; செல்வந்தராகவும், ஏழையாகவும், ஜனநாயக தலைவராகவும், சொந்தங்களுக்கு மட்டும் பதவி தருபவராகவும்; அன்பானவராகவும், ஆணாதிக்கம் செய்பவராகவும்; நம்பிக்கையாளராகவும், நம்பிக்கை கொள்ளாதவராகவும்; ஹதீஸ்களை தடை செய்பவராகவும், ஹதீஸ்களை ஆதரிப்பவராகவும் இவர்களால் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

எதிரெதிர் துருவங்களான எண்ணற்ற ஆளுமைகள் (Person alities) கொண்ட முன்னுதாரணமாக அவர் காட்டப்பட்டுள்ளார். "நீங்கள் விரும்புவதை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்." இந்த அதி வித்தியாசமான ஹதீஸின் தன்மையை குர்ஆனின் முன்னறிவிப்பான வசனம் விவரிக்கிறது. தமிழில் வந்திருக்கும் புகாரி கிரந்தங்களின் எல்லா பாகங்களையும் ஆழ்ந்து படிக்கக் கூடிய எவருக்கும் இது சுலபமாக தென்படும். அவசியம் படிக்கவும்

"நாம் முஸ்லீம்களை (அடிபணிந்தோரை ) குற்றவாளிகளைப் போல்

நடத்துவோமா? உங்கள் தீர்ப்பில எங்கே தவறு? நீங்கள் விரும்பவற்றையெல்லாம் காணக்கூடிய புத்தகம் உங்களிடம் இருக்கிறதா? (68:35-38)

اَفَنَجْعَلُ الْمُسْلِمِيْنَ كَالْمُجْرِمِيْنَ
مَا لَكُمْ كَيْفَ تَحْكُمُوْنَ
اَمْ لَكُمْ كِتٰبٌ فِيْهِ تَدْرُسُوْنَ
اِنَّ لَكُمْ فِيْهِ لَمَا تَخَيَّرُوْنَ

எல்லாவற்றையும் விட, முன்னுதாரணம் தொடர்பான இன்னொரு ஒத்த வசனம், இப்றாஹீம் நபியைப் பற்றி "இப்றாஹீமிடமும் அவரோடு இருந்தவர்களிடமும் (ஸஹாபாக்கள்) உங்களுக்கு ஓர் அழகிய முன் மாதிரி உள்ளது என்கிறது. ஆகவே வசனத்திற்கு முஹம்மது நபியின் ஹதீஸ்கள் தேவையென்றால், வசனத்திற்கு இப்றாஹீம் நபியின் ஹதீஸ்கள் தேவைப்படவில்லையா? அவருடைய ஹதீஸ்களை அறிவிக்கும் கிரந்தங்களை எங்கே தேடுவது. அவரும் நமது நபியல்லவா? வெளிப்படையான உண்மை எதுவெனில் இவ்விரண்டு முன் மாதிரிகளுக்குமான ஒரே நம்பகமான ஆதாரம் பொருத்தமான முன் மாதிரி களடங்கிய அல்லாஹ்வின் வேதம் மட்டுமே. மேலும் அது முஹம்மது நபி செய்த சில தவறுகளை நாம் திரும்ப செய்யாதிருக்க நம்மை எச்சரிப் பதாகவும் உள்ளது. (33:37, 80:1-10)

(ஆ) "அல்லாஹ்வுக்கு கீழ்ப்படியுங்கள், தூதருக்கு கீழ்ப்ப டியுங்கள்" (3:132)

இங்கு முதலில் நாம் அறிய வேண்டியது பொய்களை அறிவிப்பவரான புகாரி என்பவருக்கு கீழ்ப்படிவது நாம் தூதருக்குக் கீழ்ப்படிவது ஆகாது என்பதே. மேலும் முழுமையானதும், மிகச் சரியானதும், முழு விளக்கமானதுமான குர் ஆனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவது தான் நாம் தூதருக்கு கீழ்ப்ப டிவது ஆகும். வசனம் 25:73 அல்லாஹ்வின் வசனங்களின் மீது நம் பிக்கை யாளர்களின் மனோபாவத்தை விவரிக்கிறது. அதே சமயத்தில் ஹதீஸ் மற்றும் சுன்னாவின் பக்த கோடிகளோ இவ்வசனத்தை கண்டு கொள்வதே இல்லை . மேலும் 6:19, 7:3, 50; 45 போன்ற வசனங்களும் அல்லாஹ்வின் தூதர் தந்த ஒரே போதனை குர்ஆன் மட்டும் தான் என்று விளம்புவதையும் கண்டு கொள்வதில்லை. முஹம்மது நபி குர் ஆனையே, அன்றியும் குர்ஆனை மட்டுமே கடைப்பிடித்தார் என்பதை யும் எண்ணிப் பார்ப்பது கிடையாது (5:48, 49) முஹம்மது நபியின் ஒரே புகார் அவருடைய சமுதாயத் தினரைப்பற்றித்தான்என்னும் 25:30

வசனத்தையும் கேட்டுக் கொள்வ தில்லை. மேலும் முஹம்மது நபி, குர்ஆன் மட்டும் போதாது; குர்ஆன் முழு விளக்கமானது அல்ல, என்பவர்களைக் கைவிட்டு விடுவார் (6:114) என்பதைக் கூட புரிந்து கொள்ளாவர்களாக இருக்கிறார்கள்.

அத்தியாயம் 9ன் முதல் வசனத்தில் அல்லாஹ்வும் அவரது தூதரும் போர் உடன்படிக்கையில் இருந்து விலகிக் கொண்டதைப் பற்றி அறிவிக்கப்படுகிறது. இந்தக் காரியம், முழுக்க முழுக்க அல்லாஹ்வின் புறத்திலிருந்தே பெறப்பட்ட கட்டளையாகும். அல்லாஹ் முஹம்மது நபியைக் கேட்டுக் கொண்டோ அல்லது கலந்தாலோசித்தோ இதைச் செய்யவில்லை என்பது நமக்குக் தெரிகிறது. மேலும் முஹம்மது நபியின் பணி அல்லாஹ்வின் செய்தியை எடுத்துச் சொல்வது மட்டுமே (16:35, 24:54). எனவே 9:1ல் அல்லாஹ் இங்கு தூதரையும் சேர்த்திருப்பதன் காரணம். அவர் அச்செய்தியை வெளியிடுவதில் அங்கம் வகிக்கிறார் என்பதால்தான் இதே ரீதியில், மக்கள் தூதர்கள் வாயிலாகவே அல்லாஹ்வின் செய்தியைப் பெறுகிறார்கள் என்பதால் நாம் தூதர்களுக்கு கீழ்ப்படியுமாறு கட்ட ளையிடப்படுகிறோம். மேலும் நாம் குர் ஆன் தான் நிரந்தரமான தூதர் (65:11) என்பதையும் அது தான் நினைவூட்டலாகவும்நற்செய்தி யாகவும் (41:44,11:2) உள்ளதெனவும் அறிந்து கொள்கிறோம்.

(இ) அவர் தன் மனோ இச்சைப்படி பேசுவதில்லை 'அது' அவருக்கு வஹியாக அறிவிக்கப்படுகிறது (53:3,4)

மக்கத்து இணை வைப்பாளர்கள் முஹம்மது நபிதான் குர் ஆனை எழுதினார் என வாதிட்டனர். (25:5, 68:15) 53வது அத்தியாயத்தின் துவக்கமே குர்ஆனின் வெளிப் பாட்டைப் பற்றி உணர்த்துகிறது. மேலே சொல்லப்பட்ட அவ்வசனம் அல்லாஹ்விடமிருந்தே குர் ஆன் வந்தது என்பதை கூறுகிறது. அது முஹம்மது நபியின் சொந்தக் கூற்று மல்ல, இறைக் கூற்றாகும். எனவே 53:4ல் இடம்பெறும் 'அது' என்னும் வார்த்தை முஹம்மது நபியின் சொந்த வார்த்தைகளைக் குறிக்கிறது என்பதும் இறைவனின் வார்த்தைகளை அல்ல என்பதும் வெளிப்படையான கருத்துச் சிதைப்பே ஆகும். மேற்குறிப்பிட்ட வசனத்தின்படி 'அது' என்பது வேத வெளிப்பாடு மட்டும் தானேயன்றி, வேறெந்த விஷயமும் அல்ல. இவ்வசனத்தில் இது குர் ஆனுக்கு மட்டுமே உரித்தானது. இவ்வசனத் தில் இது குர் ஆனுக்கு மட்டுமே உபயோகப்படுத்த வேண்டியது. முஹம்மது நபியின் தினசரிப் பேச்சுக்களும் முழுக்க முழுக்க வேத வெளிப்பாடுதான் என்று எண்ணுவதும், எடுத்துரைப் பதும் வாதிடுவதும் மிகப் பெரிய அறிவீனம். உதாரணமாக, 33:37ல் முஹம்மது நபி ஜைது விடம் பேசிய பேச்சை அதாவது, ஜைது விடம் அவர் தன் மனைவியைத் 'தலாக்'

செய்ய வேண்டாம் என்று கூறியதை அல்லாஹ் கடுமையாகக் கண்டிக் கிறார். 'நீர் மக்களுக்கு பயந்து விட்டீர்' என்கிறார். இந்த இடத்தில் முஹம்மது நபி பேசிய பேச்சுக் களையும் வஹி என்று வாதிடுவது அறிவீனம் இல்லையா? அல்லாஹ் தன்னுடைய வஹியைத் தானே கண்டிக்கிறாரா? இல்லையே! மேலே குறிப்பிட்ட வசனத்தில் உள்ளது போலவே 'அது' என்னும் வார்த்தை 97வது அத்தியாயத்தில் குர்ஆனை யே குறிக்கிறது என்பதைக் காணலாம் - ' 'நாம் 'அதை' கண்ணியமிக்க இரவில் இறக்கினோம்"

(ஈ) மக்களுக்கு, அவர்களுக்கு இறக்கப்பட்ட ஒவ்வொன்றையும் நீர் வெளிப்படுத்துவதற்காக (லிது பய்யின) நாம் உமக்கு இவ்வேதத்தை அருளினோம். ஒருவேளை அவர்கள் உணரக் கூடும். (16:44)

குர்ஆனுடன் ஹதீஸ் மற்றும் சுன்னாவை மார்க்க போதனைகளின் மற்றொரு மூலாதரமாக ஸ்தாபித்து விட்டவர்கள் 'பைன்' (Byn) என்ற அரபி வார்த்தையின் பொருத்த மில்லாத அர்த்தத்தை இங்கே கையாண்டுள்ளனர் 'லிது பைய்யின' என்ற வார்த்தை இரு அர்த்தங் களையுடைய 'பைன்' (Byn) என்ற மூலச் சொல்லிலிருந்து பெறப்பட் டதாகும் (1) மறைந்திருக்கும் ஒன்றை வெளிப்படுத்துவது. (2) குழப்பமான ஒன்றைத் தெளிவாக் குவது ஆகியவையே இதன் அர்த்தம். முதல் அர்த்த ம், 'மறைப்பது' என்பதன் எதிர்ப்பதம் ஆகும். இரண்டாம் அர்த்தம் 'குழப்பம்' என்பதன் எதிர்ப்பதம் ஆகும்.

தன் மனதில் இறக்கப்பட்டதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதே முஹம்மது நபிக்கு அல்லாஹ்வால் இடப்பட்ட கட்டளை. மேலும் இதுவே தூதர்களின் முழுப்பணியும் ஆகும் (16:35) நபிமார்கள் சில நேரங்களில் அவற்றை வெளிப்படுத்துவதில் சிரமங்களை அனுபவிக்கிறார்கள். (33:37, 20:25) குர் ஆன் செறிவுள்ள அரபி மொழியில் அமைந்திருக் கையில், மேலும் அது அல்லாஹ்வால் விளக்கமளிக்கப் படுகின்ற நிலை யில், மேலும் புரிந்து கொள்ள எளிதாக இருக்கின்ற நிலையில் (5:15, 26:195, 11:1, 54:17, 55:1-2) முஹம்மது நபிக்கு அதனை தெளிவுபடுத்த வேண்டிய அதிகப் படியான பணி நிச்சயம் தரப்படவில்லை . இன்னும் 75:19 வசனம் குர்ஆனுக்கு மனிதர்களின் மேலதிக விளக்கத்தை தர எவ்விதத் திலும், இடந்தர வில்லை . மேலும் 16:44ல் இடம் பெறும் 'லிது பய்யின' எனும் வார்த்தை 3:187ம் வசனத்தில் இடம் பெறும் வார்த்தையை ஒத்ததாக இருக்கிறது. இந்த 3:187 வசனம் 'மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும் அதை மறைக்கக் கூடாது' என்று வேதத் தைப் பெற்ற மக்களை நோக்கிச் சொல்கிறது.

மேலும், குர்ஆன் புரிந்து கொள்வதற்கு இலகுவானது என்பதை அதற்கான நேரங்களை ஒதுக்கி, திறந்த மனதோடு அணுகக் கூடிய எந்த ஆணும் அல்லது எந்த பெண்ணும் விளங்கிக் கொள்ள முடியும். நம்முடைய மீட்சிக்குத் தேவையான அளவு விஷயங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும். பலபொருள் தரும் (முதஷாபிஹா) - வசனங்களைப் புரிந்து கொள்ள தூதரால் மட்டும் தான் முடியும் என்பதல்ல உங்களுக்கு ஆழமான அறிவிருந்து, குர்ஆனை மெய்யான நம்பிக்கையுடனும், நல்ல சிந்தனையிடனும் ஆராய்வீர்களானால் நீங்களும் பல பொருள் தரும் (முதஷாபிஹா) வசனங்களின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியும். வசனம் 3:7 இந்த பல பொருள் தரும் (முதஷாபிஹா) வசனங்களைப் பற்றிய உண்மைகளை நமக்கு பல கோணங்களில் தெரிவிப்பதாக இருக்கிறது. (இது ஒரு சுவாராஸ்யமான, மேலும் ஒரு தொகுப்புரை வழங்கவேண்டிய அளவு விஷயங்களடங்கிய தலைப்பாகும்).

அல்லாஹ்வையும், கல்வியில், உறுதிப் பாடு உடையவர்களையும் தவிர வேறொவரும் அதன் உண்மைப் பொருளை அறியார்...

(உ) நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கும் அவருடைய : தூதருக்கும் முன்னர் (கருத்தால்) முந்தாதீர்கள் (49:1)

ஹதீஸ் மற்றும் சுன்னாவைப் பின்பற்றுவோர், அல்லாஹ்வைப் பிரதிநிதித்துவப் படுத்துவது குர்ஆன் என்றும், முஹம்மது நபியைப் பிரதிநிதித்துவப் படுத்துவது குர் ஆனுக்கான அவரது கருத்துகள் என்றும் வாதிடுகின்றனர். இதன் மூலம் அவர்கள் குர்ஆன் மட்டும் மீட்சிக்குப் போதாது என்று கூறத் தலைப்படுகின்றனர். சிலர் இந்த வாதத்தை நேரடியாக கூற மாட்டார்கள். குர் ஆன் நமக்கு வழிகாட்ட போதுமானது, மற்றும் முழுமையானது என்று கூட கூறுவார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிடுவது 114 அத்தியாயங்களும் 6346 வசனங்களும் கொண்ட அல்லாஹ்வின் குர் ஆனை அல்ல எனும் விஷயம் அவர்களிடம் மேற்கொண்டு சில கேள்விகளை வைக்கும் போது வெளிப்படும் ஏனெனில் அவர்களுடைய மனங்கள், மனிதக் கூற்றுகளாலும், தற்காலிக கருத்தாக்கங்களாலும் மலிந்து விட்ட மனித குர் ஆனால் குழம்பிப் போயுள்ளன. மேலும் அவர்கள் மெய்யான நம்பிக்கை கொண்டவர்களைப் பார்த்து “நீங்கள் தூதரைப் புறக்கணிக்கிறீர்கள்" என்கின்றனர். குர்ஆன் என்றால் அல்லாஹ்வுடையது என்றும், தூதரைக் குறிப்பது அதற்கு அவருடைய விளக்கம் தான் என்று கருதுவதும் நம்புவதும் ஷைத்தானுக்கு ஆதரவளிப்பதாகும் (ஊ) கூறுவீராக - நான் உங்களிடம் எந்த கூலியினையும் கேட்கவில்லை.

ஆயினும் உங்கள் ஒவ்வொருவரிடமும் நான் கேட்பது யாதெனின் உறவினர்களை கவனி யுங்கள் என்ப தே" (42:23)

இந்த வசனம் பெரும்பாலும் ஷியாமுஸ்லீம்களால் தான் தவறாகக் கையாளப்படுகின்றது. முஹம்மத் நபி தன்னுடைய உறவினர்களை கவனிக்கச் சொன்னதாக கட்டளை யிடப்பட்டடுள்ளது என்பதாக அப்பிரிவினர் வாதிடுகின்றனர். இவ்வாறு இதை சிதைப்பது கொண்டு தான தர்மங்களை, இரத்தத்தை உறிஞ்சக் கூடிய ஓட்டுண்ணிகள் போல் செயல்பட்டு கையாளக் கூடிய ஒரு பிரிவினர் தோன்றத் தலைப் பட்டனர். ஈரான், ஈராக் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை சேர்ந்த பல இலட்சக்கணக்கானோர் தாங்கள் முஹம்மது நபியின் வாரிசுகள் (ஸய்யீது அல்லது ஷரீப்) என்று கூறி தங்களுக்கு கட்டாய பொருளாதார உதவிகள் செய்யப்பட வேண்டும் என்கின்றனர். பொருளாதார ரீதியில் மக்களிடம் பலன்களைப் பெற இவ்வசனத்தை தவறாகக் கையாள்கின்றனர். உண்மை என்னவெனில், இவ்வசனம் “என்னுடைய உறவினர் களை" என்று கூறவில்லை . மாறாக இதில் அவர் எந்தக் கூலியினையும் நம்பிக்கையாளர்களிடம் கேட்க வில்லை என்று தான் சொல்கிறது. மேலும் அவர்களால் இயன்றால் உறவினர்களைக் கவனிக்கும் படிக் கூறுகிறது. உறவினர்களைப் பேண வேண்டிய அவசியம் பற்றி 2.83, 4;36, 8:41 மற்றும் 16:90ல் வலியுறுத்தப்படுகிறது.

**எங்கே குறைபாடு - ஓர் ஒப்பீடு**

குர் ஆன் ஒரு மிகத் துல்லி யமான செய்தியினை ஒலிபரப்பிக் கொண்டிருக்கும் ஒரு வானொலி போன்றது. ஆயினும் குறைபாடு நம்முடைய ஒலிவாங்கிகளிடம் (Receiver) தான் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது. நம்முடைய ஒலிவாங்கி ஒலிபரப்பினை சரியான முறையில் வாங்காவிட்டாலோ, அல்லது நாம் புரிந்து கொள்ள முடியாவிட்டாலோ நாம் தான் அதனைச் சீர் செய்ய வேண்டிய வர்களாவோம். பலகீனமான காற்ற லையிருக்கும் பட்சத்தில் நம்முடைய கொள்கலங்களை (Batteries) மாற்றவேண்டும் அல்லது உணர் கம்பிகளை (Antennas ) சரி செய்ய வேண்டும். அப்படியும் நமக்குத் துல்லியமான முறையில் செய்தி கிடைக்கவில்லையாயின் நம்முடைய நிலையத்துக்குச் சரியாகத் திருப்ப வேண்டும். அதாவது குர்ஆன் வானொலிக்கு மட்டுமே அப்போது தான் மற்ற நிலையங்களின் குறுக்கீடோ, சத்தங்களோ இல்லாமல் நமக்குக் கிடைக்கும். இதை அடைவதற்கு, அதைப்பற்றி அறிவு உள்ளவரிடமோ அல்லது அவ்வேலையில் திறமைசாலியான ஒருவரிடமோ உதவி பெற்றுக்கொள்ளலாம். இப்போதும் நம்முடைய ஒலிவாங்கி வேலையே செய்ய வில்லையென்றால் அதன் உடைபட்ட

பாகங்களைப் பொருத்துவதற்கான வேலையை முனைந்துப் பார்க்க வேண்டும். அப்படியும் நாம், ஒலிபரப்பில் தான் கோளாறு என்று எண்ணுவோமானால் யாராலும் நமக்கு உதவ முடியாது. இறை ஒலிபரப்பானது விரிவான முறையில் கிடைக்க வேண்டுமானால் ஆதங்கத் துடன் முயல வேண்டும். அதாவது அதனை மும்முரமாகவும் அதற் கொப்பான காரியங்கள் கொண்டும் நடத்தவேண்டும்.

இறைச் செய்தியினை சரியான முறையில் பெறுவதற்கு, ஒலிவாங்கி, மற்றும் உணர்கம்பி இவற்றின் செயல்பாடுகள், கொள்க லங்களின் சக்தி, நம்முடைய அலை வரிசைகளின் துல்லியம் ஆகியன மிகவும் முக்கியமானது.

## எதுசரி

முஹம்மது நபிக்குகாஸிம், இப்ராஹீம் என்று இரண்டு ஆண்மக்கள் பிறந்து இறந்து விட்டதாக ஹதீஸ்கள் கூறுகின்றன ஆனால் இறைவன்தன்திருமறையில் கூறுகிறார்.முஹம்மதுஉங்கள் ஆவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை (33:40) எதுசரி? சிந்தியுங்கள்

சிந்தனைக்கு சில விஷயங்கள்.

1. அல்லாஹ்வைச் சொல்வதும் குர் ஆன்தான் தூதரைச் சொல்வதும் குர் ஆன்தான்.

2. குர் ஆனுக்கு கீழ்ப்ப டிவது தான் அல்லாஹ்வுக்கும் அவரின் தூதருக்கும் கீழ்ப்படிவதாகும்.

3. குர் ஆன், நீங்கள் அல்லாஹ் வையும் மூஸாவை கீழ்ப்படியுங்கள் என்றோ, அல்லது அல்லாஹ்வையும் முஹம்மதையும் கீழ்ப்படியுங்கள் என்றோ. ஒருபோதும் சொல்வ தில்லை. ஆனால் குர்ஆன், மாறாமல் சொல்வதென்னவென்றால் "அல்லாஹ்வுக்கு கீழ்ப்படியுங்கள் மேலும் தூதருக்குக் கீழ்ப்படியுங்கள்" என்பதே. இது ஏனெனில் 'ரஸுல்' எனும் வார்த்தை 'ரிஸாலா' (தூதுச் செய்தி) என்ற வார்த்தையிலிருந்து தான் பெறப்பட்டது. தூதுச்செய்தி முழுக்க முழுக்க அல்லாஹ் விடமிருந்து தான் வருகிறது. தூதுச் செய்தி இல்லாமல் தூதர் எப்படி இருக்க முடியும்.

4. தூதர்கள் மனிதராயிருக்கும் பட்சத்தில் தவறுகள் செய்யக்கூடும். ஆகவேதான் நம்பிக்கையாளர்கள் முஹம்மது நபியிடம் வாக்குறுதி செய்து கொள்ளும் போது ஒரு நிபந்தனையின் பேரில் தான் அவருக்கு கீழ்ப்படிய வேண்டியவர் களாகிறார்கள். அது என்னவெனில், 60:12ல் சொல்லப்பட்ட படி அவருடைய நன்மையான கட்டளை களுக்கே. மேலும், முஹம்மது நபிக்கும் அவருடன் இருக்கும் நம் பிக்கையாளர்களுடன்

கலந்தாலோசிக்கச் சொல்லி தனிப் பட்ட கட்டளையும் அல்லாஹ் இடுகிறார். (3:159) தூதரின் தனிப்பட்ட முடிவினை வேறெவரும் ஆட்சேபிக்க முடியாது என்றிருந்தால் கலந்தாலோசித்தல் என்பதே அர்த்தமற்றாகிவிடும். ஆனாலும் முடிவான தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அதைப் பின்பற்றியாக வேண்டும் என்பதும் உண்மை.


5. தூதர்கள், அவர்களுடைய வாழ்நாட்களில் சமுதாய தலைவர் களாகவே இருந்துள்ளனர். இந்த அம்சத்தை ஒப்பிடுக்கையில் தலைமைப் பொறுப்பு வகிப்பவர் களும், தூதர்களும் வேறு வேறு அல்லர். எனவே 4:59 வசனத்தின் படி, அவர்களும் கீழ்ப்படிய வேண்டியவர்களே ஆயினும் இந்தக் கீழ்படிதல் தனிப்பட்ட முறையில் அல்ல, கலந்தாலோசித்தலும், ஒருவருக்கொருவர் சம்பாஷித்தலும் அங்கு இருக்க வேண்டும். இதன் படி முடிவெடுக்கவேண்டும்.

6. தூதர்களுடைய நிலைமை அவர்களுடைய வாழும் காலத்தில் அவர்கள் ஒரு ஆசிரியராகவும் இருக்கக் கூடிய, அதே வேளையில் பயில்பவராகவும் இருக்கிறார்கள். நாம் அவர்களிடம் மேற்கேள்விகள் கேட்கவும், விஷயங்களை விவாதிக் கவும், அவர்களின் நோக்கங்களை அறியவும் மேலும் அவர்களுடைய தவறுகளை சரிசெய்யவும் கூட அப்போது வாய்ப்புக்களை பெற முடிகிறது. அதே வேளையில் அவர்களும், நாம் தவறாக புரிந்து கொண்ட விஷயங்களை சரிசெய்யும் சந்தர்ப்பத்திலும் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் சென்று விட்ட பின்னர் அவர்களின் போதனைகள் உறைந்து விட்டவையாகவும், அதன் காலத்திற்கொப்ப விரிந்து செல்லும் முப்பரிமான தகுதியை இழந்து விடுவதாகவும் ஆகி விடுகிறது. உறைந்து விட்ட, குறுகிய கால, அறிவுத் துணுக்குகள் அறியாத மக்களின் கைகளில் ஒரு அபாயகரமான ஆயுதங்களாக மாறி அல்லாஹ்வின் போதனைகளைத் தடுக்கக் கூடியவைகளாகி விடு கின் றன. அவை தூதரின் பெயரில் ஒவ்வொரு நிதர்சனமான தவறு களையும் தாங்கி நிற்கின்றன. அல்லாஹ்வின் வேதத் தைக் கற்கக் கூ டி ய மாண வர்கள் ஒவ்வொரு வரை யும் புண்படுத்துவதாக இருக்கின்றன.

## பொய்

எவருடைய கடைசி பேச்சு லாயிலாஹ இல்லல்லாஹ் என்று இருக்கிறதோ அவர் சுவனம் பிரவேசித்து விட்டார். அபூதாவூத் 31/190ல் காணப்படுகிறது. முகம்மதியர்கள் கூறுவார்கள், வழி கெட்டவர்களால் மரண தருவாயில் கலிமாவை கூற முடியாது என்று. இது இரண்டுமே அசத்தியம் என்பதை குர்ஆன் கூறுகிறது. 10:90 வசனத்தில் பிர்அ வ்னின் கடைசி பேச்சு லாயிலாஹ இல்லல்லாஹ் அதற்காக அவனுக்கு சுவனமா!

# தாப்பத்துல் அர்ளு




குர்ஆன் முன்னறிவிப்புச் செய்யும், இறுதி நாளின் அறிகுறி களில் ஒன்று, 'தாப்பத்துல் அர்ளு' என்பதாகும். "சரியான நேரம் வரும்போது, நாம் அவர்களுக்காக பூமியில் உள்ள பொருட்களாலான (Earthly Material) ஒரு படைப்பை வெளிப்படுத்துவோம். அது மனிதர்கள் நமது வசனங்களின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை அறிவிக்கும். அல்குர் ஆன் (27:82) இவ்வசனத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் 'தாப்பத்துல் அர்ளு' என்ற அரபிச் சொல், ஓர் உயிரினத்தைக் குறிக்கிறது என்று பலரும் பொருள் கொள்கின்றனர். இது எவ்வாறு தவறானது என்றும், இச்சொல் கம்ப்யூட்டரைக் குறிக்கி றது என்றும் இங்கு உண்மையான இறை நம்பிக்கையாளர்களுக்கு விளங்கத் தருகிறோம்.

இன்றைய வளர்ச்சியடைந்த நவீன விஞ்ஞானம், இறைவனை உண்டா இல்லையா? என்பதை ஆராய்ச்சி செய்து அறிவியல் ரீதியாகவே ஒப்புக் கொள்ள முயற்சி செய்து வருகிறது. இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் விஞ்ஞானி என ஒப்புக் கொள்ளப்பட்ட ஐன்ஸ்டைன் (Einstein) என்பவர் கூறுகிறார் : "நான் பிரபஞ்சத்தின் அத்தனை விதிகளின் ஒருமைப்பாட்டிலும் தன்னைக் காட்டிக் கொள்ளும் கடவுளைத்தான் நம்புகிறேன். நம்முடைய தின வாழ்க்கையின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் கடவுளை அல்ல."

இந்த விஞ்ஞானி அரபியில் 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்று கூறாவிட்டாலும் கூட, இவர் கூறும் செய்தி, அல்லது இவர் அறிந்து கொண்ட கடவுள், பற்றிய கருத்து, 'லாயிலாஹ் இல்லல்லாஹ்' என்பதை நம்மால் அறிய முடிகிறதில்லையா? "ஆதமுடைய சந்ததிகளே! நீங்கள் ஷைத்தானை வணங்கக் கூடாது. நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதி', என்று நான் உங்களிடம் உறுதிமொழி வாங்கவில் லையா?" நீங்கள் என்னையே வணங்க வேண்டும். இதுதான் நேரான வழி (36:60-61)

இந்த வசனங்கள் கூறும் உண்மையிலிருந்து, நம்முடைய தின

வாழ்க்கையின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் கடவுளாக, ஷைத்தான் இருக்கின்றான் என்பதையும், அவனை நாம் வணங்க கூடாது என்பதையும் அறிந்து கொள்கின்றோம்.

பிரபஞ்சத்தின் விதிகளின் ஒருமைப்பாட்டில் இந்த விஞ்ஞானியால் அறிந்து கொள்ளப்பட்ட அதே கடவுள், அதே விதிகளின் ஒருமைப்பாட்டில் தனது வார்த்தைகளான அல்குர் ஆனையும் தருகின்றார். பிரபஞ்சத்தின் விதிகளை ஒரு குறிப்பிட்ட ஒருமைப்பாட்டிற்குள் கொண்டு வந்தது போல், முடியுமானால்,

அதே ஒருமைப்பாட்டிற்குரிய விதிகளின் படியே இறைவனின் வார்த்தை களான அல்குர்ஆனும் அமைக்கப்பட் டுள்ளது. சர்வ வல்லமையுள்ள இறைவனுக்கு இது கடினமான காரியமல்லவே? என்றாலும், இவ் வாறான செயலை இறைவன் "காரியங்களில் (அற்புதங்களில்) அது மிகப்பெரியது" 74:34 என்று கூறுகின்றார். ஒருசில உதாரணங் களைக் காண்போம்.

1. சூரியன், சந்திரன், பூமி இவை 19 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரே நேர்கோட்டில் வருகின்றன.

2. ஒரே ஆண்டில், இரு மாதங்களில் தலா இரு பௌர்ணமிகள் வருவது 19 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் அபூர்வ நிகழ்வு ஆகும்.

3. ஹாலி வால் நட்சத்திரம் 76 வருடங்களுக்கு ஒருமுறை நமது சூரிய குடும்பத்திற்கு வருகை தருகிறது. 19x4=76

4. மனித உடல் 209 எலும்புகளால் ஆனது. 19x11=209

5. பொதுவாக, மனிதப் பிறப்பின் கர்ப்ப காலம் 280 நாட்கள் (அ) 40 வாரங்கள் எனக் கணக்கிடப்படுகிறது. மிகச் சரியாகச் சொல்வதானால், விதைத்த நாளிலிருந்து கர்ப்ப காலம் 266 நாட்கள் (அ) 38 வரங்கள் ஆகும்,. (ஆதாரம் Langman's Medical Embryology by T.W. Sadler, is uses as a text book in most of the Medical Schools in the U.S.A. on Page 88 of the fifth edition) 19x14=266, 19x2=38.

இவை ஒருசில விஞ்ஞான உண்மைகளாகும். இவை போன்ற எண்ணற்ற உதாரணங்களில் இந்த 19ன் அடிப்படையிலான அற்புதங்கள் இருக்கின்றன. இதுவே ஐன்ஸ்டைன் போன்றவர்கள் அறிய விரும்பிய ஒருமைப்பாட்டு விதியாகும். இதே ஒருமைப்பாட்டு விதியில்தான் இறைவனின் வார்த்தை களான குர்ஆனும் அமைக்கப் பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்டும் சாதனமே கம்ப்யூட்டர் ஆகும்.

ஹா, மீம் தெளிவான இவ் வேதத்தின் மீது சத்தியமாக, நாம் இதனை மிக்க பாக்கியமுள்ள ஓர் இரவில் இறக்கிவைத்து, நிச்சயமாக நாம் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றோம்.

அறிவார்ந்த சகல காரியங்களும் இதில் தான் நம்முடைய கட்டளையின்படி நிர்மாணிக்கப் பட்டுள்ளன. நிச்சயமாக நாம் தூது அனுப்புகின்றோம். (44:1-5)

குர்ஆன் வசனங் களின் படி, விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புகள் அனைத்தும் குர் ஆனில் ஏற்கனவே நிர்மாணிக் கப்பட்டு விட்டன, என்பதையும், தேவையான காலத்தில் அவை மனிதனால் கண்டு பிடிக்கப்பட்டு அறிந்து கொள்ளப்படுகின்றன, என்பதையும் நாம் அறிந்து கொள்கின்றோம். அதாவது, விஞ்ஞான ஆராய்ச்சிகளின் எல்லை, குர்ஆனுக்கு வெளியே எதுவு மில்லை, என்பதே உண்மையாகும். விஞ்ஞானம் வேறு, ஆன்மீகம் வேறு என்பவர்கள் 44:1-5 வசனங்களை மீண்டும் ஒருமுறை படித்துக் கொள்ளவும்.

இறைவனது தீர்மானத்தின் படியே மனிதனின் கண்டுபிடிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. பூமியிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட படைப்பு கம்ப்யூட்டரே ஆகும். எவ்வாறெனில், இந்த கம்ப்யூட்டரின் முக்கிய பாகம் அதன் மூளை எனப்படும் பகுதி (Mother Board) சிலிக்கான் என்ற பொருளால் ஆனது. இந்த சிலிக்கான் ஆனது மண்ணிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பொருள் ஆகும். சிலிக்கான் இல்லை எனில் கம்ப்யூட்டர் இல்லை. இந்த அற்புதப் படைப்பு, குர்ஆனில் 19 என்ற எண் ஏற்படுத்தும் விளைவுகளை வெளிப்படுத்திக் காட்டுவதாக இருக்கிறது. மேலும், மக்கள் இறைவனது வசனங்களை உறுதிகொள்ள வில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. கம்ப்யூட்டர்குர்ஆனில்19ன்விளைவு களைச்சுட்டிக் காட்டியிருந்தாலும் அது எவ்வாறு மனிதர்கள் குர்ஆனை விசுவாசம் கொள்ள வில்லை என்று கூறு கிறது? எந்த விதத்தில் நாம் விசுவாசிக்க வில்லை என்ற கேள்விக்கு நமது இதழ்களில் விரிவான விளக்கங்களை அறியத் தருகிறோம்.

இப்போது, இந்த உலகத் தேவைகளில் கம்ப்யூட்டர் எவ்வாறு மனிதர்களின் நம்பிக்கைக்குரியதாக இருக்கிறது? என்பதை ஓரிரு உதாரணங்களின் மூலம் காண்போம். இன்று அனைத்து ஏர்போர்ட்களிலும் கம்ப்யூட்டருடன் விமானங்களின் இயக்கம் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. டிக்கெட் பதிவு செய்வது முதல் விமானத்தின் குறிப்பிட்ட பாகங்களின் செயல்திறனைச் சோதிப்பது வரை கம்ப்யூட்டர் பயன் படுத்தப் படுகிறது. வானத்தில் அதன் பாதையைக் கண்காணிப்பும் கம்ப்யூட்டர்தான். இப்போது நீங்கள் ஒரு பயணியாக இருக்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். விமானத்தின் ஒரு பகுதி பாதிக்கப் பட்டிருப்பதாகவும், உங்கள் பயணம் தடைப்படுகிறது என்றும் கம்ப்யூட்டர் சுட்டிக்காட்டினால் நீங்கள் நம்புவீர் கள் தானே?

நகைக் கடைகளில் மிகத் துல்லியமாகத் தரத்தைச் சோதிக்கும் கம்ப்யூட்டர்கள் வந்திருக்கின்றன. ஆண்டாண்டு காலமாக நம்பிக் கையான பொற்கொல்லரிடம் நகைகளைச் செய்துவந்த ஒரு பெண்மணி, இந்த கம்ப்யூட்டரிடம் தனது நகைகளைச் சோதனை செய்த போது, அவருக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது. பணம் போனதே என்ற கவலையை விட தான் நம்பிக்கைத்

துரோகம் செய்யப்பட்டிருக்கின் றோம் என்பதே அவருக்குப் பேரிடியாக இருந்ததாகவும் கூறியி ருக்கின்றார். இந்த மாதிரியான ஒரு நம்பிக்கைத் துரோகத்திற்கு நாம் ஆளாகி விடுவதை விரும்புவோமா? மதவாதிகளை நம்பி மோசம் போகாதீர்கள் என்று கம்ப்யூட்டர் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

நமது இறை நம்பிக்கைக்குத் திரையிடும் பல தவறுகளை இந்த 19 என்ற என் மூலமாக, தரம் பிரித்துக் காட்டி, நாம் எவ்வாறு இறைவசனங் களை விசுவாசிக்கவில்லை எவ்ப தையும் சொல்லிக் காண்பிக்கிறது. உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் மக்கள் இறைவசனங்களை விசுவாசிக்கவில்லை என்று 'இண்டர் நெட்' மூலமாக முழங்கிக் கொண்டி ருக்கிறது. இதன் முழக்கத்தை யாராலும் அழித்துவிடவோ தடை செய்யவோ இயலாது. இறைவனது பேரருளை இழந்து விட்ட, விரட்டப்பட்ட ஷைத்தானுடைய சூழ்ச்சியினால், இது ஒரு விநோத விலங்கினமாகத் தான் இருக்கும் என்று நம்பிக்கையேற்படுத்தப்பட்டு உண்மையை அறிந்து கொள்வதி லிருந்து நாம் தடுக்கப்படுகின்றோம். இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டு ஆயிரக்கணக்கான மைல்களுக்கப் பால் இருக்கும் ஒரு நாட்டையோ, நகரத்தையோ அழித்து விடும் வல்லமை வாய்ந்த கருவிகளை மனிதன் ஆயத்தமாக வைத்திருக்கும் இந்நாளில், எந்த சக்தியாலும் அழிக்க இயலாதவாறும், உலக முழுவதும் பரவி இருக்கும் படியாகவும் ஆன ஒரு படைப்பை இறைவன் வெளிப்படுத்துவார் என் பதை ஷைத்தானாலும் அவனது சிநேகிதர்களாலும் ஜீரணிக்க இயல வில்லை போலும்!

ஸாலிஹ் நபியின் கூட்டத்தி னருக்கு இறைவனின் அத்தாட்சி யாக ஒரு பெண் ஒட்டகம் கொடுக்கப் படுகின்றது. அதனை அவர்கள் நபியின் காலத்திலேயே, அவரது எச்சரிக்கையை கண்முன் அறிந்து கொண்டிருக்கும்பொழுதே கொன்று விட்ட னர். (11:64-65) இறை கோபத்திற்கும் ஆளாகின்றனர். இன்று குர்ஆனை நமக்குப் பெற்றுத் தந்த முஹம்மத் நபி நம்மிடையே இல்லை. இந்நிலையில் ஒரு விநோத விலங்கு இறைவசனங்களை மக்கள் உறுதியாக இல்லை என்று கூறினால் அதை வாயைத் திறக்க விடாமலேயே அழித்து விடலாம் என்பது ஷைத்தானு டையவும் அவனது கூட்டாளிக ளுடையவும் நப்பாசை போலும்! என்னே இறைவனது பெருங்கருணை! இதுதான் குர்ஆனில் 27:82ல் வாக்களிக்கப்பட்டிருக்கும் படைப்பு என்பதை நமக்கு அறிவித்துத் தந்த (Dr. Rashad Kalifa) தூதரை விரோதிகள் சுட்டுக் கொன்று விட முடிந்ததே தவிர, அந்தப் படைப்பின் முழக்கத்தை எவராலும் நிறுத்த முடியவில் லையே?

தூதரைப் பின்பற்றி, இறை செய்தியை மக்களுக்கு வெளிப் படுத்திக் கூற முயலும் உண்மையான இறை நம்பிக்கையாளர்களைத் துன்புறுத்தவோ, கொல்லவோ, முயற்சிக்கும் ஷைத்தான்களை இனம் கண்டு அவர்களைப் புறக்கணித்து விட வல்ல அல்லாஹ் போதுமான மன உறுதியைத் தருவாராக.

# ஹதீஸ்களின் உண்மை நிலை!

தேர்ந்த, அனுபவம் பெற்ற மாபெரும் மனோவசியக்காரனான ஷைத்தானின் ஏமாற்று வித்தைகளை, உண்மை கலந்த பொய்களை குர்ஆன் நன்கு விவரிக்கிறது. இருப்பினும் குர் ஆனை புரிந்து கொள்ளாத இன்றைய முஸ்லிம் சமூகம் அவன் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல் அவன் வலையில் சிக்கிக் கிடக்கிறது.

ஹதீஸ்களில் எத்தனையோ நல்ல விஷயங்கள் இருக்கின்றன. அறிவுக்கும் விஞ்ஞானத்திற்கும் ஒத்துவரக் கூடியதாகவும் அவை உள்ளன, என்று கூறி சிலர் ஹதீஸ்களைப் பின்பற்றுவதற்கு நியாயம் கற்பிக்கின்றனர். இது உண்மைதான். ஏனெனில் அத்தகைய ஹதீஸ்கள் குர்ஆன் வசனங்களின் அடிப்படையில் கூறப்பட்ட செய்திகள் ஆகும். மூடர்கள் நிறைந்திருந்தாலும் நல்லறிவுடையோர் சிலர் இருந்தி ருப்பர் அல்லவா? ஆனால் இது தான் ஷைத்தானின் தூண்டியில் மாட்டப் பட்டிருக்கும் புழு, வேடன் விரித்த வலையின் கீழ் இருக்கும் நெல் மணிகள், அப்பாவி மீன்கள் புழுவைக் கடிக்கும், பின்னர் தூண்டில் முள்ளில் சிக்கிக் கொள்ளும். ஷைத்தான் இழுத்து அவர்களை நரகில் தள்ளி விடுவான்.

கலப்பட வியாபாரி தான் கலப்படம் செய்கிறோம் என்பதைக் காட்டிக் கொள்ளவா செய்வான்? சாதாரண மனிதர்களே இவ்வாறு ஏமாற்றும்போது மாபெரும் ஏமாற் றுக்காரான ஷைத்தான் மனிதர்களை எவ்வாறெல்லாம் ஏமாற்றக் கூடும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தவிர, ஹதீஸ் புத்தகங்கள் அளவுக்கு எழுதப்பட்ட எந்தப் புத்தகத்தை எடுத்துக்கொண்டாலும் அது கதையாகவோ புராணமாகவோ எதுவாக இருந்தாலும் அவற்றிலும் ஏதேனும் நல்ல விஷயங்கள் இருக்கத் தான் செய்யும்.

மேலும், பொய்கள் உண்மை கலக்காமலேதான் கூறப்படும் என்று நினைத்தால் அது அறிவீனமாகும். தனிப்பட்ட சிறு பொய்களாக இருந்தாலும் சரி, அல்லது ஹதீஸ் புத்தகங்கள் போல பெரும் பொய்களின் தொகுப்பாக இருந் தாலும் சரி, பொய்கள் - உண்மைகளைக் கலந்தே கூறப்படும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே ஹதீஸ்களில் சில உண்மைகளும், நல்லவைகளும் இருந்தாலும், அவற்றையும் நாம் மார்க்க ஆதாரமாக எடுத்துச் செயல் படக்கூடாது.

மார்க்க ஆதாரமாக எடுத்துச் செயல் படத்தக்கது குர் ஆன் மட்டுமே, குர்ஆன் அல்லாத வேறு எதையும் மார்க்க ஆதாரமாகக் கொள்வது இணைவைப்பாகும் என்பதைக் குர் ஆன் நமக்குத் தெளிவாகக் கூறுகிறது. அவசியம் பார்க்க (5:48-50, 10:15-18, 11:1, 6:19, 114-116, 73-75, 18:109, 35:38, 43, 12:40, 111, 69:40-47, 17:39, 75:19,) ஹதீஸ்களைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுவோர், உண்மையில் அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்ற உறுதியுடன் இருப்பதில்லை . ஆனால் அவற்றையும் மார்க்க ஆதாரமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் மட்டும் பிடிவாதமாக இருப்பார்கள். நபியின் சுன்னத் என்பது செய்தால் நன்மை, செய்யாவிட்டால் குற்ற மில்லை என்பதைப் போன்ற ஒரு தோற்றத்தையும் முஸ்லீம் பொதுமக் களிடையே இந்த முல்லாக்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். (உம்) கடமையான தொழுகைக்கு முன்னும் பின்னும் இவர்கள் உருவாக்கி வைத்திருக்கும் தொழு கைகள். ஆனால், 'யார் என் சுன்னத்தைப் புறக்கணிக்கிறாரோ அவர் என்னைச் சேர்ந்தவரில்லை' என்று நபி கூறியதாக ஒரு ஹதீஸ் மிகவும் கடுமையாகவும் இருக்கிறது.

வணக்கங்களில் நபியின் சுன்னத் என்பது குர் ஆன் கூறும் ஃபர்ளுக்கு அடுத்தபடி. ஆனால் ஹலால் ஹராம் விஷயங்களில் அது குர் ஆனுக்கும் மேலே. இதுவே அவர்கள் நிலை சில ஹதீஸ்கள் குர் ஆனின் வசனங்களை அதன் சட்டங்களை மாற்றுகிறதா இல் லையா என்று நீங்கள் அறிந்த முல்லாக்களிடம் கேட்டுப் பாருங்கள். அவர்கள் வெட்கமில்லாமல் ஆம் என்று கூறுவதைப் பார்ப்பீர்கள். இறைவனின் சொற்களை, உத்தரவுகளை, சட்டங்களை நபியின் பெயரால் மனிதர்கள் கூறிய சொற்கள் மாற்றிவிடும் என்று நினைப்பது ஒரு இறை நம்பிக் கையாளனுக்குத் தகுமா? இன்னும் பற்பல குழப்பங்கள் நிறைந்தவையே இந்த ஹதீஸ் தொகுப்புகள்.

இவற்றில் உள்ளவற்றை முழுமையாகப் பின்பற்றுவது என்பதும் காரிய சாத்தியமற்ற ஒன்று என்பதை இவற்றைப் படிப்பவர்கள் உடனே உணர்ந்து கொள்ள முடியும். நபி ஒரு 'ஸாஉ' தண்ணீ ரில் ஒளு செய்தார்கள் என்கிறது ஹதீஸ். ஒரு 'ஸாஉ' என்பது நான்கு கைக் கொள்ளளவு. (ஒரு சிறு மக் அளவு தண்ணீர்) இந்த அளவுத் தண்ணீரில் யாரேனும் ஒளுச் செய்வதைப் பார்த்திருக்கிறீர்கள்? நபி நான்கு ஸாவு தண்ணிரில் குளித்தார்கள் என்கிறது ஹதீஸ் (ஒரு சிறு பக்கெட்டுக்கும் குறைவு) யாரேனும் இந்த அளவுத் தண்ணீரில் திருப்தியாகக் குளிக்க முடியுமா? நபியின் சுன்னத்தை மறுப்பது மாபெரும் குற்றம் என்று கூறும் நீங்கள் நம்பும் ஆலிம்களாவது இவ்வாறு செய்கிறார்களா?

இது மட்டுமல்ல, முஹம்மத் நபி, 'இஷா' என்னும் இரவுத்

தொழுகைக்குப் பின் பேசிக் கொண்டிருப்பதைத் தடை செய்தார்கள் என்று ஒரு ஹதீஸ் இதற்கு விதிவிலக்காக அபூபக்கர் சில நபித்தோழர்களுடன் இரவில் மார்க்க விஷயங்கள் பேசிக் கொண்டிருந் ததாக ஒரு ஹதீஸ் மட்டுமே. இன்றைய சூழ்நிலையில் இஷா வுக்குப் பின்னர் மார்க்க விஷயத் தைத் தவிர வேறு எதையும் பேசிக் கொண்டிருக்கக் கூடாது என்றால் அது நடக்கிற காரியமா? 'சுன்னத் தைப் பின்பற்றுபவர்கள், பின்பற்ற வேண்டும் என்பவர்களாவது இவ்வாறு செய்ய ஒப்புக் கொள்வார்களா? ஆனால் முஹம் மதியர்கள் இதையெல்லாம் வசதி யாக மறந்து விடுவார்கள்.

மேலும், ஆண்கள் குப்புறப்படுக்கக்கூடாது, பெண்கள் மல்லாக் கப்படுக்கக் கூடாது என்றும் ஹதீஸ்கள், கைகளை இப்படிக் கோர்த்து வைக்கக் கூடாது இப்படிக் கோர்த்து வைத்துக் கொள்ளலாம் என்றும், ஹதீஸ்கள், மலஜலம் கழிக்க உள்ளே போகும்போது இப்படிப் போக வேண்டும் இன்னது ஓத வேண்டும், வெளியே வரும் போது இப்படித்தான் வரவேண்டும் இன்ன து தான் ஓதவேண்டும் என்றும் ஹதீஸ்கள். இன்னும் ஆடை உடுத்தும் போதும்; களையும் போதும், வெளியில் செல்லும் போதும், உள்ளே நுழையும் போதும், உறங் கும்போதும், விழிக்கும் போதும், ஏன் மனைவியரிடம் உறவு கூடும் போதும் கூட குர் ஆனில் இல்லாத ஏராளமான காரிய சாத்தியமற்ற தடைகள், அரபிப் பிரார்த்தனைகள் என்று ஏகப்பட்ட சுமைகளை நபியின் பெயரால் இந்த அரபியர்கள் நம்பிக்கையாளர்கள் மேல் சுமத்தி இருக்கிறார்கள்.

இது ஷைத்தானின் சூழ்ச்சியாகும். காரிய சாத்தியமற்றவற்றை இறைவன் ஏவியுள்ளான், தடுத்துள் ளான் என்று நம்ப வைத்து, அதனை நாம் மீற வைத்து, இதன் மூலம் இறைவன் மெய்யாகவே குர் ஆனில் தடுத்துள்ள தீய காரியங்களைச் செய்யும்போது நம்மைக் குற்றவுணர் வற்றவர்களாக ஆக்குவதே அவன் நோக்கம். கடமையான தொழுகை களை மட்டும் தொழுதால் நம் தொழுகை முழுமையானது ஆகாது, ஸுன்னத்துகளையும் தொழ வேண்டும் என்று எண்ண வைத்து அது முடியாமல் போகும் போது, தொழு கையைவிட்டே நம்மை விரட்டி விட வேண்டும் என்பது தான் அவன் திட்டம். எனவே நம்பிக்கை யாளர்கள் குர் ஆனைப் படித்து ஷைத்தானின் செயல்திட்டங்களை அறிந்து எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும் ஷைத்தானின் தூண்டிலில் உள்ள புழுக்களாலும், அவன் வலையின் கீழ் உள்ள நெல்மணிகளாலும் கவரப்படாமல், இறைவன் நமக்கு உவந்தளித்த வளமிக்க அல்குர் ஆனையே நாம் மார்க்க ஆதாரமாக எடுத்துப் பின் பற்ற வேண்டும்.

அவரை யன்றி நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவை

யாவும், நீங்களும், உங்கள் முன்னோர்களும் கண்டு பிடித்த பெயர்களே அன்றி வேறில்லை. அல்லாஹ் இத்தகைய இணையாளர்களை அங்கீகரிக்கவில்லை. அனைத்து தீர்ப்புகளும் அல்லாஹ்வுக்கு உரியவை. மேலும் அவர், நீங்கள் அவரைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது என்று தீர்ப்பளித்திருக்கிறார். இதுவே சரியான மார்க்கமாகும். ஆனால் மக்களில் பெரும்பாலோருக்கு இது தெரிவதில்லை . (12:40)

مَا تَعْبُدُوْنَ مِنْ دُوْنِهٖٓ اِلَّآ اَسْمَآءً
سَمَّيْتُمُوْهَآ اَنْتُمْ وَ اٰبَآؤُكُمْ مَّآ
اَنْزَلَ اللّٰهُ بِهَا مِنْ سُلْطٰنٍ اِنِ
الْحُكْمُ اِلَّا لِلّٰهِ اَمَرَ اَلَّا تَعْبُدُوْٓا اِلَّآ
اِيَّاهُ ذٰلِكَ الدِّيْنُ الْقَيِّمُ وَلٰكِنَّ
اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ

வணக்கம் என்பது தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் போன்றவை மட்டும் அல்ல கீழ்ப்படிதல், முழுமையாக கட்டுப்படுதல், அவரையன்றி வேறு யாருக்கும் சுயமாக எந்த சக்தியும் இல்லை என்று நம்புவதும், அவருக்கு மட்டுமே கீழ்படிவதும் ஆகும். இன்று முஸ்லிம்கள் குர் ஆனுடன் மற்றொரு ஆதாரமாக நம்பி பின்பற்றிக் கொண்டிருக்கும். புகாரி, முஸ்லிம்,

**ஆமீன்**

ஆமீன் என்பது அரபி மொழியோ குர் ஆனில் உள்ள வார்த்தையோ இல்லை. பெரும்பாலான முஸ்லீம்கள் தொழுகையில் அல்பாத்திஹா முடிவில் ஆமீன் என்று கூறியும். அல்பாத்திஹாவை அச்சடிக்கும் போது ஆமீன் என்ற வார்த்தையை குர் ஆனோடு இணைத்து அச்சடித்தும் வருகின்றனர். குர்ஆனில் இல்லாத ஒன்றை அத்துடன் நாம் இணைப்பது. குற்றமாகாதா?

திர்மிதி, நஸயி, இப்னுமாஜா, அபூதாவூது, போன்றோருக்கு அல்லாஹ் எந்த அங்கீகாரமும் அளிக்கவில்லை .

இவை நம்முடைய, முன்னோர்களும், நாமும் வைத்துக் கொண்ட பெயர்களேயன்றி வேறில்லை (புகாரியின் இயற்பெயர் முஹம்மது இப்னு இஸ்மாயில் என்பதாகும்)

அவற்றில் உள்ளவற்றை மார்க்க ஆதாரமாக எடுத்து பின்பற்றுவது அவர்களுக்கு நம் வணக்கத்தை செலுத்துவதே ஆகும். இது அல்லாஹ்வின் தீர்ப்புக்கு மாற்றமானதாகும்.

இவ்வுண்மையை அறியாமல் இருக்கும் பெரும்பான் மையில் இருந்து அல்லாஹ் நம்மைக் காக்க வேண்டும்.

**இன்ஷா அல்லாஹ்.**
**(தொடரும்)**

# நிராகரிப்போருக்கான தண்டனை தவிர்க்க முடியாதது

இறைவன் தன் இறுதி வேதமான. குர்ஆனில், நிராகரிப் போரை தண்டனையை முன்னோக்கி அதாவது எதிர்பார்த்து இருக்கும்படி கூறுகிறார் (17:15, 34:46)

உண்மை யாதெனில் நிராகரிக்கும் மக்களுக்கு உடனடி தண்டனை ஏற்படுவதற்கு அடையா ளமாக இன்றைய தலைமுறையின ருக்கு ஒரு தூதரை இறைவன் அனுப்பிவிட்டார்.

இறைச்செய்தி, தெளிவான அத்தாட்சியின் துணையோடு கடந்த 30 ஆண்டுகளாக மிகவும் தீவிரமாக மக்களுக்கு சொல்லப்பட்டு வரு கிறது. முகம்மது நபியை இ றை வ னு க் கு இணையாக்கி வைத்துள்ள முகம்மதியர்களும் இந்த உண்மைக்கு எதிராக மிகவும் கடுமையாக செயல்பட்டு வருகிறார்கள். முகம்மது நபி சரித்திரம், மற்றும் சைத்தானின் கொள்கைகளான ஹதீஸ், மற்றும் சுன்னத்துக்களை பெரும் பொருட் செலவில் ஆடம்பரமான புத்தகங் களாக தயாரித்து அவசர கதியில் சர்வதேச ஆலோசனைக் கூட்டங் களை மக்கா, கெய்ரோ, இஸ்லாமாபாத் முதலிய நாடுகளில் ஏற்பாடு செய்து மறு வெளியீடு செய்துவருகின்றனர். இவர்களின் இச்செயல்கள் வழியாக இறைவன் முகம்மதியர்களின் நயவஞ்சகத்தை வெளிப்படுத்தி அவர்களின் இணை வைப்பையும் உறுதிப்படுத்தி விட்டார். இப்போது தண்டனையிலிருந்து தப்பிக்க அவர்களுக்கு எந்த வழியும் கிடையாது.இறைத் தண்டனையால் நிச்சயம் அவர்கள் அழிவார்கள். அதுவும் மிக விரைவில்.

**என்னுடைய தூதுத்துவத்தை நம்ப மறுப்பவர்கள். இறைவனுக்கு எதிராக வேண்டுமென்றே அவதூறு சொல்பவர்களே - டாக்டர் ரஷாத் கலீபா**

குர்ஆனை உண்மையாக நம்புபவர்களும், உண்மையைத் தேடி அறியும் நோக்கில் அதை பார்ப்பவர்களும் மட்டுமே குர்ஆனை அணுக முடியும், குர் ஆனை அறிய முடியும் என்பதை முழு நம்பிக்கையோடு குர்ஆனை படிக் கும் ஒவ்வொருவரும் அறிந்து கொள்வார்கள். குர்ஆன் மற்ற புத்தகங்கள் போன்ற சாமான்ய புத்தகம் அல்ல என்று குர்ஆன் நமக்கு கற்பிக்கிறது. மனிதர்களின் உள்ளங்கள் குர்ஆனை அறிவது என்பது நிச்சயமாக இறைவனின் கட்டுப் பாட்டில் உள்ளது. இறைச் செய்தியின் சிறப்பை உணராதவர்களும், உண்மையற்ற நிலையில் கபட உள்ளத்தோடு படிப்பவர்களும் குர்ஆனை அணுகுவதை விட்டும் தடுக்கப்பட்டுள்ளனர் என்பதை குர்ஆ னின் 6:25, 17:45-46, 18:57, 56:79-ன் மூலம் அறிய முடிகிறது.

அரபிமொழியின் மிகச்

சிறந்த அறிஞர்கள் பலரும் குர் ஆனை அணுகுவதில் தோல்வி கண்டிருப்பது மிகவும் ஆச்சரியமும், அதிசயமும் நிறைந்த வெளிப்ப டையான உண்மையாகும். அதற்கு மிகச் சரியான உதாரணம் குர்ஆனின் கணித கட்டமைப்பு அற்புதமாகும். எளிமையும், பளிச்சிடும் தன்மையும் கொண்டதாக இது இருந்த போதிலும் இதன் ஒரு பகுதியைக் கூட அறிய முடியாத நிலையிலேயே பல அறிஞர்கள் உடைய நிலை இருக்கிறது. மேலும் முகம்மதியர்கள் மற்றும் அவர்களுடைய முன்னணி அறிஞர்களின் பொதுவான கூற்று யாதெனில் "குர்ஆன் புரிந்து கொள்ள கடினமானது" என்பதே. அவர்களின் இறைச் செய்தி பற்றிய அறியாமையை இந்த கூற்று உடனடியாக நிரூபிக்கிறது. காரணம் இறைவன் தன் திருமறையில் "எளிதில் புரியும்படி குர்ஆனை நாம் ஆக்கியுள்ளோம்" என்று 54:17, 22, 32, 40 முதலிய வசனங்களில் திரும்ப திரும்ப அழுத்திச் சொல்கிறார். மேலும் அத்தியாயம் 41 வசனம் 44ல் இறைவன், உண்மையான நம்பிக்கையாளர்களின் உள்ளங்கள் மொழி வேறுபாடில்லாமல் குர் ஆனை அறியும் என்றும் குர் ஆனை பெறுவதற்கான அளவு கோல் கபடமற்ற உண்மையான நம்பிக்கையே ஆகும் என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

குர்ஆனின் கணித அற்புதம் கடந்த 1400 ஆண்டுகளுக்கும் மேலாக இறைவனால் பாதுகாக்கப்பட்ட ரகசியமாகவே இருந்தது. (10:20, 25:4-6) கடந்த 14 நூற்றாண்டுகளாக குர்ஆனின் ஒவ்வொரு எழுத்தையும் கவனமாக ஆராய்ச்சி செய்த முஸ்லிம் அறிஞர்களில், எவருமே இந்த தெளிவான, வெளிப்படையான அற்புதத்தை அறியவோ, வெளிப்படுத்தவோ இயலவில்லை. ஏனெனில் மிகச் சிறந்த இந்த அற்புதத்தை குறிப்பிட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட ஒரு மனிதர் மூலமே வெளிப்படுத்த வேண்டும் என்பது இறைவனின் நாட்டமாக இருந்தது. அந்த மனிதரின் அடையாளமும் குர்ஆன் முழுவதும் பல இடங்களில் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. (உதாரணம்: குர்ஆனின் வார்த்தைகள் அட்டவணையின் பக்கம் 320, Index to the words of Quran 'ரஷதா' என்ற வார்த்தையின் பல வடிவங்கள் குர்ஆனில் 19 இடங்களில் உள்ளது என்பதை காட்டு கிறது). ஆகையால் குர்ஆனின் அடிப்படையில் நிச்சயமாக முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ள அந்த மனிதர் ஒரு பொய்யராகவோ, அல்லது நிராகரிப்பவராகவோ இருக்க சாத்தியமே கிடையாது.

இறைவன் குர்ஆனில் மறைந்துள்ள இந்த மிகச்சிறந்த ரகசியத்தை (74:35) திரை நீக்கி வெளிப்படுத்தக் கூடிய பணியை செய்ய என்னை தேர்ந்தெடுத்துள் ளார் நான் இறைவனின் தூதர் என்பதற்கு, மறுக்க முடியாத, பொய்யென நிரூபிக்க முடியாத பல ஆதாரங்களை இதற்கு முன்னரும் கொடுத்துள்ளேன். இந்த பணியை செய்ய நியமிக்கப்பட்டவர் 'ரஷாத் கலீபா' தான் என்பதை உலகிற்கு சர்வ வல்லமைமிக்கவரான இறைவன் உலகப் பொது மொழியான கணித மொழியில் தெளிவாக அறிவித்தே இருக்கிறார். உலகின் பல மூலைகளிலும் உள்ள

ஆயிரக்கணக்கான நம்பிக்கை யாளர்கள் என்னுடையதூதுத் துவத்தின் உண்மையை காணும் அருள்செய்யப்பட்டுள்ளனர்.

**நிராகரிப்பாளர்கள் சொன்னது என்ன?**

குர்ஆனுடைய முன்னறி விப்பை நிறைவு செய்கின்ற இந்த வேளையில் இறை நிராகரிப்பாளர் கள் என்னை பொய்யன், மோசக் காரன், நிராகரிப்பாளன் (காபிர்) மேலும் பலவாறு அழைத்தார்கள். இதன் மூலம் அவர்கள் சத்தியத்தை தெளிவாக அறிந்துகொள்ளா மலேயே வேண்டு மென்றே இறைவனுக்கு எதிராக அவதூறு சொல்கிறார்கள். அவர்களைப் பொறுத்த மட்டில் நான் இறைவனையும், அவருடைய சிறந்த அற்புதத்தையும் திரித்து கூறும் ஒரு கெட்ட மனிதனாக கருதப்படுகிறேன். ஆனால் குர்ஆன், உண்மையான நம்பிக்கையாளர்கள் மட்டுமே குர்ஆனை அணுக முடியும் என்பதை உறுதியாகத் திரும்பத் திரும்பச் சொல்கிறது. இதன் அடிப்படையில் என்னுடைய தூதுத்துவத்தை, நான் இறைத் தூதர் என்பதை நம்ப மறுப்பவர்கள் நிச்சயமாக குர்ஆனை மறுப்பவர்களும், இறைவனுக்கு எதிராக அவதூறு சொல்பவர்களுமே ஆவர். இத்தகைய பரிதாபமான ஆன்மாக்கள் மிகவும் மோசமான தண்டனைக்கு இப்போதும் எப்போதும் (இம்மையிலும், மறுமையிலும்) உள்ளாவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

**பெரும் அற்புதம் - அதற்கேற்ற பெரும் தண்டனை!**

நிராகரிப்பாளர்களின் தண்டனை என்பது இறை அத்தாட் சியின் மாட்சிமையோடு நேரடியாக பங்கு வகிக்கிறது என்பதை குர் ஆன் மூலம் நம்மால் அறிய முடிகிறது. அத்தியாயம் 74ன் வசனங்கள் 25 முதல் 35 வரை கூறும் உண்மை என்னவென்றால் இறைவனின் கணினி யுகத்தின் (Computer age) தலைமுறையினருக்கு 19 அடிப்படையிலான அற்புதம் குறித்து - நிச்சயமாக இது மிகப் பெரிய அற்புதங்களில் ஒன்றாகும் என கூறு கிறது. கூடுதலாக, மிகத் துல்லியமாக அத்தியாயம் 34ன் வசனம் 45 இன்றைய தலைமுறையினருக்கு முன் சென்ற தலை முறை யினருக்கு கொடுக்கப்பட்ட ஆதாரங்களை விட பத்து மடங்கிற்கும் அதிகமாக தரப்பட்டுள்ளதாக கூறுகிறது. ஆகையால் அத்தாட்சிகளையும் தூதர்களையும் நிராகரித்த காரணங்களாலேயே முன்சென்ற மக்கள் தண்டனைக்குள்ளானார்கள். இதன் மூலம் அத்தாட்சிகளை மறுக்கும் நிராகரிப்பாளர்களுக்கு அந்த அற்புதங்களின் விகித வீதமே தண்டனை வழங்கப்படும். எனவே இன்றைய நிராகரிப்பாளர்களுக்கு இன்றைய அற்புதத்தின் விகித வீதமே தண்டனையும் வழங்கப்படும். மேலும் அத்தியாயம் 54ன் வசனம் 43ம் இன்றைய நிராகரிப்பாளர்கள் உறுதியாக பிரத்யேகமான கடுமை யான தண்டனையிலிருந்து விடுவிக் கப்பட மாட்டார்கள், " என்று மிகத் தெளிவாக கூறுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள பிரத்கேயகமான, கடுமையான இறைத்தண்டனைஉண்மையாகவே மிக விரைவில் நிகழக்கூடியதே

# யூதர்களின் சதி

இன்றைய கால கட்டத்தில் முஸ்லீம்களிடையே பெரும் பாலானவர்கள் நம்பிக் கொண்டிருக்கக் கூடிய, பின்பற்றக் கூடிய மார்க்க விஷயங்களை விமர்சித்து கருத்துக் கூறினால், மேலும், இறை வேதமான குர்ஆனோடு ஒப்பிட்டு அத்தகைய விஷயங்கள் தவறாக உள்ளன என்று மக்களிடம் சிந்திக்கும்படி எடுத்து ரைத்தால் நியாய உணர்வுள்ள நடுநிலையானவர்கள் மற்றும் நேர் வழியில் நடக்க வேண்டும் என்ற இறையச்ச முடையவர்கள் சிந்திக்கிறார்கள். உண்மையை தெரிந்து தெளிவு பெற நேர்வழி பெற இறைவனிடம் வேண்டி நிற்கிறார்கள்.

ஆனால் சிலர் இவை யூத கிறிஸ்துவர்களின் சதி என்றும், இது முஸ்லீம்களுக்கு எதிரானவர்களின் சதி என்றும் பிரச்சாரம் செய்கி றார்கள். குர்ஆனின் படி தங்களது செயல்களும், நடைமுறை களும் இருக்கிறதா? நாம் தவறான பாதையில் தான் இருக்கிறோமா அல்லது நாம் நேரான பாதையில் தான் இருக்கிறோமா என்று சிந்திப்பதில்லை. நாம் மார்க்கமாக பின்பற்றுவது இறைவனும், இறைத் தூதரும் காட்டித் தந்த பாதைதானா என்று குர்ஆனைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை.

குர்ஆன் அல்லாததையும் மார்க்கம் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருப்பவற்றை சைத்தான் அவர்களுக்கு அழகாக்கிக் காட்டு கிறான். (6:43, 16:63) மார்க்கத்தைப் பற்றி தெரிந்தால் மட்டும் போதும். இதைவிட இனியாரும் அதிகம் கூறிவிட முடியாது. மேலும் இவற்றிலிருந்து எதையும் நாம் விட்டு விடவும் தேவையில்லை என்று தாங்கள் இதயத்தில் கொண்டிருக்கும் இத்தவறான கொள்கைகளுக்கு மூடி போட்டுக் கொள்கின்றனர். இனி மேல் எவர் சரியானதைக் கூறினாலும் அந்த மூடியைத் தாண்டி உள்ளே நுழையாமலும், எவர் அவர் கருத்தை தவறு என்று நிரூபித்தாலும் அந்த மூடியை விட்டு வெளியில் வராமலும் உண்மையை அறிய முடியாமல் சைத்தான் பாதுகாத்து கடைசியில் நரகத்திலும் சேர்ப்பித்து வித்து விடுவான் (17:45, 46)

இறைவசனத்திற்கு மாறு :- தங்களை மார்க்க அறிஞர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் குர்ஆன் வசனங்களுக்கு அர்த்தங்களை திரித்துக் கூறியும் மேலும் சாதாரண மனிதர்களுக்கு குர் ஆன் விளங்காது என்றும் அதை விட்டு அவர்களை. தூரமாக்குகிறார்கள் (41:44) இறைவன் காட்டித் தந்த நேரான வழிக்கு மாறு செய்கிறார்கள் (45:20)

**(தொடர்ச்சி 27ம் பக்கம்)**

# Sura 2: The Heifet (Al-Baqarah)

## அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

***The Test Begins***

**சோதனை ஆரம்பம்**

وَعَلَّمَ اٰدَمَ الْاَسْمَآءَ كُلَّهَا ثُمَّ عَرَضَهُمْ عَلَى الْمَلٰٓٮِٕكَةِ فَقَالَ اَنْۢبِـُٔوْنِىْ بِاَسْمَآءِ هٰٓؤُلَآءِ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ

31. He taught Adam all the names* then presented them to the angels, saying, "Give me the names of these, if you are right."

31. அவர் ஆதமுக்கு அனைத்துப் பெயர்களையும்* கற்றுக் கொடுத்தார், பின்னர் நீங்கள் சரியான வர்களாக இருந்தால், இவற்றின் பெயர்களை எனக்குத் தாருங்கள், என்று கூறியவராக, அவற்றை வானவர்களிடம் முன் வைத்தார்.

قَالُوْا سُبْحٰنَكَ لَا عِلْمَ لَنَآ اِلَّا مَا عَلَّمْتَنَا ‌ؕ اِنَّكَ اَنْتَ الْعَلِيْمُ الْحَكِيْمُ

32. They said, "Be You glorified, we have no knowledge, except that which You have taught us. You are the Omniscient, Most Wise."

32. அவர்கள் கூறினர், நீரே துதிப்பிற்குரியவர், நீர் எங்களுக்குக் கற்றுத் தந்தவற்றைத் தவிர, எந்த அறிவும் எங்களுக்கு இல்லை. நீரே சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

قَالَ يٰٓـاٰدَمُ اَنْۢبِئْهُمْ بِاَسْمَآٮِٕهِمْ‌ۚ فَلَمَّآ اَنْۢبَاَهُمْ بِاَسْمَآٮِٕهِمْۙ قَالَ اَلَمْ اَقُلْ لَّـكُمْ اِنِّىْٓ اَعْلَمُ غَيْبَ السَّمٰوٰتِ وَالْاَرْضِۙ وَاَعْلَمُ مَا تُبْدُوْنَ وَمَا كُنْتُمْ تَكْتُمُوْنَ

33. He said, "O Adam, tell them their names." When he told them their names, He said, "Did I not tell you that I know the secrets of the heavens and the earth? I know what you declare, and what you conceal."

33. அவர் கூறினார், ஆதமே, அவர்களுக்கு அவற்றின் பெயர்களைக் கூறுவீராக. அவற்றின் பெயர்களை அவர்களுக்கு அவர் கூறிய போது, அவர் கூறினார்,வானங்கள் மற்றும் பூமியின் இரகசியங்களை நான் அறிவேன் என்று நான் உங்களிடம் கூறவில்லையா? நீங்கள் அறிவிப்பவற்றையும் மறைத்துக் கொள்பவற்றையும் நான் அறிவேன்.

وَاِذْ قُلْنَا لِلْمَلٰٓٮِٕكَةِ اسْجُدُوْا لِاٰدَمَ فَسَجَدُوْٓا اِلَّاۤ اِبْلِيْسَؕ اَبٰى وَاسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكٰفِرِيْنَ

34. When we said to the angels, "Fall prostrate before Adam," they fell prostrate, except Satan; he refused, was too arrogant, and a disbeliever.

34. ஆதமின் முன் சிரம் பணிந்து விழுங்கள் என வானவர்களிடம் நாம் கூறிய பொழுது, அவர்கள் சிரம் பணிந்து விழுந்தனர், சாத்தானைத் தவிர; அவன் ஏற்கமறுத்தான், மிகவும் ஆணவம் கொண்டவனாகவும், நம்பமறுக்கின்ற ஒருவனா கவும் இருந்தான்.

وَقُلْنَا يٰۤاٰدَمُ اسْكُنْ اَنْتَ وَزَوْجُكَ الْجَنَّةَ وَكُلَا مِنْهَا رَغَدًا
حَيْثُ شِئْتُمَا وَلَا تَقْرَبَا هٰذِهِ الشَّجَرَةَ فَتَكُوْنَا مِنَ الظّٰلِمِيْنَ
فَاَزَلَّهُمَا الشَّيْطٰنُ عَنْهَا فَاَخْرَجَهُمَا مِمَّا كَانَا فِيْهِ وَقُلْنَا اهْبِطُوْا
بَعْضُكُمْ لِبَعْضٍ عَدُوٌّ ۚ وَلَكُمْ فِى الْاَرْضِ مُسْتَقَرٌّ
وَّمَتَاعٌ اِلٰى حِيْنٍ

فَتَلَقّٰۤى اٰدَمُ مِنْ رَّبِّهٖ كَلِمٰتٍ فَتَابَ عَلَيْهِ اِنَّهٗ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ

قُلْنَا اهْبِطُوْا مِنْهَا جَمِيْعًا ۚ فَاِمَّا يَاْتِيَنَّكُمْ مِّنِّىْ هُدًى فَمَنْ تَبِعَ
هُدَاىَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

وَالَّذِيْنَ كَفَرُوْا وَكَذَّبُوْا بِاٰيٰتِنَاۤ اُولٰۤٮِٕكَ اَصْحٰبُ النَّارِ
هُمْ فِيْهَا خٰلِدُوْنَ

35. We said, "O Adam, live with your wife in Paradise, and eat therefrom generously, as you please, but do not approach this tree, lest you sin."

36. But the devil duped them, and caused their eviction therefrom. We said, "Go down as enemies of one another. On Earth shall be your habitation and provision for awhile."

***Specific Words****

37. Then, Adam received from his Lord words, whereby He redeemed him. He is the Redeemer, Most Merciful.

38. We said, "Go down therefrom, all of you. When guidance comes to you from Me, those who follow My guidance will have no fear, nor will they grieve.

39. "As for those who disbelieve and reject our revelations, they will be dwellers of Hell, wherein they abide forever."

35. நாம் கூறினோம், ஆதமே, உம்முடைய மனைவியுடன் சுவனத்தில் வசிப்பீர்களாக, மேலும் தாராளமாக அதிலிருந்து, நீங்கள் விரும்பியவாறு உண்ணுவீர்களாக, ஆனால் நீங்கள் பாவம் செய்துவிடாதிருக்கும் பொருட்டு, இந்த மரத்தை நெருங்காதீர்கள்.

36. ஆனால் சாத்தான் அவர்களை ஏய்த்தான், மேலும் அதிலிருந்து அவர்கள் வெளியேறக் காரணமானான். நாம் கூறினோம், ஒருவர் மற்றவருக்கு விரோதிகளாகக் கீழே செல்லுங்கள். பூமியின் மீது உங்கள் வசிப்பிடமும், மேலும் சிறிதொரு காலம் வாழ்வாதாரமும் இருக்கும்.

**குறிப்பிட்டவார்த்தைகள்***

37. பின்னர், ஆதம் தன்னுடைய இரட்சகரிடமிருந்து வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டார், அதன் மூலம் அவரை அவர் மீட்டுக் கொண்டார். அவர் தான் மீட்பவர், மிக்க கருணையாளர்.

38. நாம் கூறினோம், நீங்கள் அனைவரும், இங்கிருந்து கீழே செல்லுங்கள். என்னிடமிருந்து உங்களுக்கு வழிகாட்டல் வரும் பொழுது, என்னுடைய வழி காட்ட லைப் பின்பற்றுவோருக்கு அச்சம் எதுவும் இருக்காது, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

39. நம்பமறுத்து மேலும் நம்முடைய வெளிப்பாடுகளை ஏற்கமறுப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் நரகவாசிகளாக இருப்பார்கள், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

يٰبَنِىٓ اِسْرَآءِيْلَ اذْكُرُوْا نِعْمَتِىَ الَّتِىٓ اَنْعَمْتُ عَلَيْكُمْ وَاَوْفُوْا بِعَهْدِىٓ اُوْفِ بِعَهْدِكُمْ وَاِيَّاىَ فَارْهَبُوْنِ

وَاٰمِنُوْا بِمَآ اَنْزَلْتُ مُصَدِّقًا لِّمَا مَعَكُمْ وَلَا تَكُوْنُوْٓا اَوَّلَ كَافِرٍ بِهٖ وَلَا تَشْتَرُوْا بِاٰيٰتِىْ ثَمَنًا قَلِيْلًا وَّاِيَّاىَ فَاتَّقُوْنِ

وَلَا تَلْبِسُوا الْحَقَّ بِالْبَاطِلِ وَتَكْتُمُوا الْحَقَّ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ

وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَارْكَعُوْا مَعَ الرّٰكِعِيْنَ

اَتَاْمُرُوْنَ النَّاسَ بِالْبِرِّ وَتَنْسَوْنَ اَنْفُسَكُمْ وَاَنْتُمْ تَتْلُوْنَ الْكِتٰبَ اَفَلَا تَعْقِلُوْنَ

## *Divine Commandments to All Jews : "You shall Believe in This Quran"*

40. O Children of Israel, remember My favor, which I bestowed upon you, and fulfill your part of the covenant, that I fulfill My part of the covenant, and reverence Me.

41. You shall believe in what I have revealed herein, confirming what you have; do not be the first to reject it. Do not trade away My revelations for a cheap price, and observe Me.

42. Do not confound the truth with false hood, nor shall you conceal the truth, knowingly.

43. You shall observe the Contact Prayers (Salat) and give the obligatory charity (Zakat), and bow down with those who bow down.

44. Do you exhort the people to be righteous, while forgetting yourselves, though you read the scripture? Do you not understand?

**அனைத்து யூதர்களுக்குமான இறைக்கட்டளைகள் "நீங்கள் இந்தக் குர்ஆனில் நம்பிக்கை கொள்ள வேண்டும்"**

40. இஸ்ரேலின் சந்ததியினரே, உங்கள் மீது நான் அருளிய என் உபகாரத்தை நினைவில் கொள்ளுங்கள், மேலும் உடன்படிக்கையின் என்னுடைய பங்கை நான் நிறைவேற்றும் பொருட்டு, உடன்படிக்கையின் உங்களுடைய பங்கை நிறைவேற்றுங்கள், மேலும் என்னிடம் பக்தியோடிருங்கள்.

41. உங்களிடம் உள்ளதை உறுதிப்படுத்துகின்றதாக, இதிலே நான் வெளிப்படுத்தியவற்றின் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்; இதனை ஏற்கமறுப் போரில் முதன்மையானவர்களாகி விடாதீர்கள். என்னுடைய வெளிப்பாடுகளை மலிவானதொரு விலைக்கு வணிகம் செய்து விடாதீர்கள், மேலும் என்னைக் கருத்தில் கொள்ளுங்கள்.

42. சத்தியத்துடன் அசத்தியத்தைக் கலந்து விடாதீர்கள், அன்றியும் அறிந்து கொண்டே, சத்தியத்தை நீங்கள் மறைத்து விடவும் வேண்டாம்.

43. நீங்கள் (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளை கடைப் பிடிக்கவும், மேலும் (ஜகாத்) கடமையான தர்மத்தைக் கொடுக்கவும், மேலும் குனிந்து வழிபடுபவர்களுடன் சேர்ந்து குனிந்து வழிபடவும் வேண்டும்.

44. நீங்கள் வேதத்தைப் படித்துக் கொண்டிருந்த போதிலும், உங்களையே மறந்து விட்ட நிலையில், மக்களை நன்னெறியாளர்களாகும்படி நீங்கள் தூண்டுகின்றீர்களா? நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா?

وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ وَاِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَۙ

45. You shall seek help through steadfastness and the Contact Prayers (Salat). This is difficult indeed, but not so for the reverent,

45. உறுதிப்பாடு மற்றும் (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளின் மூலமாக நீங்கள் உதவி தேட வேண்டும். இது உண்மையில் கடினமானதே, ஆனால் பக்திமான்களுக்கு அவ்வாறல்ல,

الَّذِيْنَ يَظُنُّوْنَ اَنَّهُمْ مُّلٰقُوْا رَبِّهِمْ وَاَنَّهُمْ اِلَيْهِ رٰجِعُوْنَ

46. who believe that they will meet their Lord; that to Him they ultimately return.

46. அவர்கள் தங்களுடைய இரட்சகரைச் சந்திப்போம் என்றும்; அவரிடமே அவர்கள் இறுதியாகத் திரும்புவார்கள் என்றும் நம்புபவர்கள்.

يٰبَنِىْٓ اِسْرَآءِيْلَ اذْكُرُوْا نِعْمَتِىَ الَّتِىْٓ اَنْعَمْتُ عَلَيْكُمْ وَاَنِّىْ فَضَّلْتُكُمْ عَلَى الْعٰلَمِيْنَ

47. O Children of Israel, remember My favor which I bestowed upon you, and that I blessed you more than any other people.

47. இஸ்ரேலின் சந்ததியினரே, உங்கள் மீது நான் அருளிய என் உபகாரத்தை, மேலும் மற்ற மக்கள் எவரையும் விட உங்களை நான் அதிகமாக ஆசீர்வதித்தேன் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

*Footnote*

2:30-31 See last Issue for Foot Note.

2:37 Similarly, God has given us specific, mathematically coded words, the words of sura 1, to establish contact with him (see Footnote 1:1 and Appendex 15)

பின்குறிப்பு

2:30-31 பார்க்க சென்ற இதழின் பின் குறிப்பு

2:37 இதனைப் போலவே இறைவன் நமக்கு குறிப்பிட்ட கணித அடிப்படையிலான வார்த்தைகளை கொடுத்துள்ளார். அவை சூரா ஒன்றின் வார்த்தைகள் ஆகும். இதைக் கொண்டு நாம் அவருடனான தொடர்பை ஸதாபித்துக் கொள்ளலாம். பார்க்க

(22ம் பக்கத் தொடர்ச்சி)

இறை தூதருக்கு மாறு:-

தூதுச் செய்தியான குர்ஆனை எத்திவைக்க வந்த இறைத்தூதர் முகம்மது நபி மீது பற்பல பொய்களையும், இட்டுக் கட்டல்க ளையும் ஹதீஸ் என்ற பெயரில் நபி சொன்னதாக எழுதி வைத்து, அதையும் வரலாறு என்ற அளவில் நிற்காமல், இறை வசனத்திற்கு எதிராக மார்க்கம் என்று வலியுறுத்தி நபி காட்டிய உண்மையான வழிக்கு மாறு செய்தும் சைத்தான் மனிதர் களை வழிகெடுக்கிறான்.

இறைவனால் விரட்டப்பட்ட சைத்தான் உண்மையான நல்லடியார்களைத் தவிர மற்றெல் லோரையும் இறுதி நாள் வரை வழிகெடுப் பதாகவும் நரகத்தில் சேர்ப்பிப்ப தாகவும் இறைவனிடம் சபதமிட்டு இருக்கிறான். அனுமதியைப் பெற்றிருக்கிறான். சைத்தானிட மிருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

எனவே அறிவுடையோர்களே இந்த உலக வாழ்க்கையில் இருப்பது இரண்டு விஷயங்கள் தான். ஒன்று இறைவனால் ஏவப்பட்ட நற்செயல்கள். மற்றொன்று இறை வனால் தடுக்கப்பட்ட தீய காரியங்கள். நல்ல காரியங்கள் அனைத்தும் இறைவனால் கொடுக் கப்படுகின்றன தீயவைகள் அனைத்தும் மனிதர்கள் தம் கரங்களாலேயே ஆக்கிக் கொள்கின் றனர். (4;79, 42:30). மேலும் சைத்தான் இத்தீய காரியங்களை மனிதர்களுக்கு நற்செயல்கள் போன்று அழகாக்கிக் காட்டி வழிகெடுக்கிறான்.

ஆனால் உங்களிடம் உள்ளதோ பெரும் பொக்கிஷமான பகுத்தறிவும், எக்காலத்திற்கும், எந்தக் காரியத்திற்கும் வழிகாட்டக் கூடிய, இறைவனிட மிருந்து வந்த, உங்கள் கைகளில் தவழும் குர்ஆனும் ஆகும்.

பெரியோர்களையோ, தலைவர் களையோ, மகான்களையோ ஆலிம்களையோ, இயக்கங் களையோ மற்றும் அமைப் புக்களையோ சார்ந்துதான் அவர் களை அணுகித்தான் இறைவனின் நேர்வழியைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை.

குர்ஆனைப் படிப்பது, சிந்திப்பது, பகுத்தறிவு கொண்டு சரியென்று கண்டதை குர்ஆனோடு ஒப்பிட்டு உண்மையை தேர்வு செய்து நடப்பது நம் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். மறுமையில் நாம் ஒவ்வொருவரும் தனித்தவனாகத் தான் இறைவன் முன் கேள்வி கணக்கிற்காக நிற்கப் போகிறோம் என்பதாக குர்ஆன் கூறுவதை நினைவில் வையுங்கள் (6:94, 19-80, 95)

★ ☆ ★

# மனித சமுதாய வளர்ச்சியும் வேதங்களின் வளர்ச்சியும்

முதலில் தனிமனித வளர்ச்சியை சிறிது விரிவாகக் காண்போம். ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வளர்நிலைகளை குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முழு மனிதப் பருவம், முதிர் பருவம் என நான்கு பிரிவுகளாகப் பிரித்துக் கொள் வோம்.

குழந்தைப் பருவத்தில், அதன் வளர்ச்சிக்குத் தக்கவாறு அதன் தேவைகளைப் பூர்த்தி செய்ய பெற்றோரின் உதவி தேவைப் படுகிறது. தானாகத் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள குழந்தையால் இயலாது என்பதை நாம் அறிவோம்.

இளம் பருவத்தில் குழந்தைக்குத் தேவையானவற்றை படிப்படி யாக நாம் கற்றுத் தந்து விடுகிறோம். உண்ணவும், உடுக்கவும் கற்றுக் கொள்கிறது. நன்றாகப் படித்தல், அறிவுடன் பேசுதல், பிறருக்கு உதவுதல் போன்ற செயல்களைக் குழந்தை செய்யும் போது ஊக்கப்படுத்தவும், பொய், கோள் சொல்லுதல், சண்டையிட்டுக் கொள்ளுதல் இவற்றின் போது அவர்களைக் கண்டிக்கவும் செய்கி றோம்.

மனிதன் வளர்ந்து நன்மை தீமையைப் பிரித்தறியும் வயது வருகின்ற பொழுது அவர்களுக்குத் தேவையான அறிவுரைகளைக் கூறுகிறோம். முழு மனிதப் பருவத்தை அடையும் பொழுது அவ ரவர் செல்லும் வழியை அவரவர் தேர்ந்தெடுக்கும் பக்குவத்தையும் அடைகின்றனர். இந்தக் கால கட்டத்தில் சிறுவயதிலிருந்து பெற்ற நல்வழியைக் கவனத்தில் கொண்டு அவர்களாகவே சில பல காரியங்களில் முடிவெடுத்துக் கொள்கின்றனர்.

முதிர் பருவம் என்பது, மனிதன் அனுபவங்களைக் கற்று ணர்ந்த பருவமாகும். பலவிதமான நன்மை தீமைகளைக் கண்டு கேட்டு அனுபவித்து, பின்னர் எதைச் செய்தால் நன்மை, எதைத் செய்தால் தீமை என்ற ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவதாகும்.

இத்தகைய தனிமனித வளர்ச்சியுடன் மனித சமுதாய வளர்ச்சி எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கிறது என்று காண்போம்.

குழந்தைப் பருவம் மனித சமுதாயத்தின் ஆரம்ப நிலையாகும். ஆதம் நபியின் காலமாகக் கொள்ளலாம். இவர் காலத்தில் இவரும் இவர் மனைவியும் மட்டுமே இந்தப் பூமியில் இறைவனால் குடியமர்த்தப்பட்டனர். இவர் சுவன வாசியாக இருக்கும் பொழுதே,

இறைகட்டளையை மறந்து ஷைத் தானுடைய வார்த்தைகளில் மயங்கி தவறிழைத்தார். பின்னர் இறைவ னிடம் மன்னிப்பை வேண்டிப் பெற்றுக் கொண்டு அவருடைய குற்றத்திற்குத் தண்டனை அனுப விக்கும் விதமாக பூமிக்கு அனுப்பப் படுகிறார். (2.36, 2;37, 2:38). இவருக்கு வேத கட்டளைகள் தேவையாக இருக்கவில்லை. இறைவன் கற்றுக் கொடுத்த வார்த்தைகளைக் கொண்டு பிரார்த்தித்துக் கொண்டிருந்ததே இவருக்குரிய வேதமாக இருந்தது.

இளம்பருவம் : ஆதம் இவர்களின் இரு மகன்களில் ஒருவர் மற்றவரைக் கொலை செய்து விடுகிறார். (5:27, 28, 29, 30). எனவே, கொலை செய்வது அன்று முதல் தடுக்கப்பட்டு அது ஒரு வேத கட்டளையாகி விடுகின்றது. இதன் பின்னர் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப, அந்தந்தக் காலகட்டத்தில், தேவை யான இறைகட்டளைகளை ஆதத்தின் சந்ததிகளிலேயே இறைவ னால் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொடுக்கப் படுகின்றனர். (7:35) எவ்வாறு ஆதத்தின் இரு மகன்களில் ஒருவர் இறைவனுக்கு அஞ்சியவ ராகவும் மற்றொருவர் கர்வம் கொண்டவராகவும் இருந்தாரோ அதைப் போன்றே, ஆதத்தின் சந்ததிகளில் பெரும்பாலோர் கர்வம் கொண்டோராகவும், ஒரு சிலர் தூய ஆத்மாக்களாகவும் இருக்கின்றனர். இந்தத் தூய ஆத்மாக்களில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கே நபித்துவம் அளிக்கப்படுகின்றது அவர்கள் தங்களது கூட்டத்தினரை நல்வழிப்படுத்தும் விதமாக இறை வனால் தகுந்த கட்டளைகள் கொடுக்கப்படுகின்றனர். (12:109) இவர்கள் நம்மைப்போன்ற மனிதர் களே தூதர்கள் வராத எந்த வகுப்பாரும் பூமியில் இல்லை. (10:47) இது மனித சமுதாயத்தின் இளம் பருவமாகும். இந்த இளம்பருவத்தில், வேத கட்டளைகள் எழுதப்படுவதில்லை. அப்போதைய காலத்தில் இறைவன் மனிதர்களுக்கு எழுதக் கற்றுக் கொடுக்கவில்லை.

முழு மனிதப்பருவம் : சமுதாயம் படிப்படியாக வளர்ச்சியடைந்த பொழுது எழுத்து கற்றுக் கொடுக்கப்பட்டு வேதங்கள் எழுதப் படுகின்றன. இந்த காலக்கட்டத்தில் தவ்ராத், இன்ஜீல், சபூர் முதலான வேதங்கள் மனிதர்களுக்குக் கொடுக் கப்பட்டன. இவற்றையும் மக்களில் பெரும்பாலோர் நிராகரித்து விட்டனர். அத்துடன் தங்களது கற்பனைகளையும் கலந்து இறை வேதத்தின் புனிதத் தன்மையைக் கெடுத்தும் விட்டனர்.

முதிர் பருவம் : இறுதியாக இறைவன் அல்குர் ஆனை முஹம்மத் நபி முலமாக மக்களுக்கு அருள்கின்றார். இந்த இறைவேதம் இறக்கியருளப் பெறும் போதே எழுதப்பட்டு விடு கின்றது. மேலும், குர்ஆன் பூர்த்தியடைந்த வேதமாக இறைவ னால் அறிவிக்கப்பட்டு விடுகின்றது. (5:3) இந்தப் பூர்த்தியடைந்த வேதத்தை இறைவன்தானேபாதுகாப்பதாகவும் வாக்களிக்கின்றார் (15:9) மேலும்

குர்ஆன் முன்னுள்ள வேதங்களை உண்மைப் படுத்துவதாகவும் இருக்கின்றது. (5:48). பூர்த்திய டைந்த வேதத்தைப் பெற்றுக் கொண்ட மனிதன், முதிர் பருவ நிலையை அடைந்து விடுகின்றாள். படிப் படியாக மனித சமுதாயம் வளர்ச்சியடைந்தது போலவே, வேதங்களின் வளர்ச்சியும் தேவை யாகி, முழுமையடைந்த வேதமாகிய குர்ஆனை நாம் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். குர்ஆனில் நன்மை, தீமைகள் தெளிவாகப் பிரித்தறிவிக்கப்பட்டு விட்டது. நேர்வழி பெறவிரும்பும் ஒவ்வொரு மனிதருக்கும், குர்ஆன், தெளிவான வழியை அறிவிக்கின்றது. இறை வனை அடையும் இலகுவான வழியாகக் குர்ஆன் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது, இறைவனை அடைவது ஒன்றே நமது குறிக்கோளாகக் கொண்டோமானால், அதற்கான நேர்வழியாகக் குர்ஆனும், பயணிக் கும் வாகனமாக கடமைகளும், வாகனத்தின் எரிபொருளாக குர்ஆன் கூறும் நல்அமல்களும் அமைந்திருக்கின்றன. நேர்வழியில் செல்லத் தீர்மானித்து குர் ஆனைத் தேர்வு செய்த கொண்டோமானால், இறைவனை நாம் அடைய வேண்டிய தொலைவு குறைந்து பாதை விரிவடைந்து விடுகின்றது. (6:125) கடமைகளை வாகனமாகக் கொண் டோம் எனில் பயணம் இலகு வாகிவிடுகின்றது. குர்ஆன் கூறும் தீய செயல்களை விலக்கி, நற்செயல்களைக்கைக்கொண்டோம் எனில், பயணம் விரைவாகி விடுகின்றது.

இறைவனை அடையும் மிகச் சிறந்த வாகனம் கடமையான வணக்கங்களாகும். இவற்றின் செயல் முறைகளையும் குர்ஆனில் சுலபமாக நாம் அறிந்து கொள்ள முடியும். இந்த கடமைகள், தொழுகை, ஜக்காத், நோன்பு, ஹஜ் ஆகியவை ஆகும். இவற்றை நிறைவேற்றும் முறைகளும் குர்ஆனில் தெளிவாகக்குறிப் பிடப்பட்டிருக்கின்றன. இந்த மார்க்க கடமைகள்யாவும் இப்ராஹிம் நபிக்கு அருளப் பட்டவையாகும். (21:73, 2:43, 127, 128, 2:183, 3:43, 19:31-59, 20:14) இப்ராஹி முடைய மார்க்கத்தைப் பின்தொடரும் படி முஹம்மத் நபி கட்டளை யிடப்படுகின்றார். (3;68, 6:161) நாமும் அவ்வாறே கட்டளையிடப் படுகின்றோம். (2:135, 3:95, 4;125, 6;161, 22;78) இப்ராஹிம் நபி நடைமுறைப் படுத்திய மார்க்கக் கடமைகள் காலப் போக்கில் சிதைந்து ஷைத்தானால் பல வழிகளிலும் கெடுக்கப்பட்டு பாழ்படுத்தப்பட்டன. மக்கள் வழிகெடுக்கப்பட்டு விட்டனர். பின்னர் வந்த நபிமார்களும் இப்ராஹி முடைய மார்க்கத்தையே பின்பற்றுமாறு ஏவப்பட்டனர். இப்ராஹிம் நபிக்குப் பின் வந்த மூஸா நபியும், ஈஸா நபியும் ஜகாத் கொடுத்து வந்ததையும், தொழுகை யைப் பேணி வந்ததையும் குர்ஆன் சுட்டிக்காட்டுகிறது. மார்க்க வழிபாடு சம்பந்தமான எல்லா செயல்பாடுகளும் இப்ராஹிம் நபியிடமிருந்து வந்தவை என்பதையும், முஹம்மத் நபி அந்த செயல்பாடுகளை மீண்டும் நடை முறைக்குக் கொண்டு வந்தார்

என்பதையும் வசனம் (16:123) உறுதிப் படுத்துகின்றது. குர்ஆன் வசனம் 21:73ல் தொழுகையும் ஜகாத்தும் இப்ராஹிம் நபிக்குக் கட்டளையாக்கப் பட்டிருந்ததை அறியலாம். பின்னர் வந்த மக்கள் அவற்றைப் பாழ்படுத்தி விட்டனர் என்ப தை (8:35, 9:54) ஆகிய வசனங்கள் தெளிவாக்குகின்றன. இவ்வாறு மக்களால் உருக்குலைந்து போன மார்க்கக் கடமைகளைச் சீர்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் முஹம்மத் நபியாவார். 'குர் ஆன் மார்க்கக் கடமைகளைத் தெளிவுபடுத்தும் வேத நூலாக இருக்கிறது. இதில் நமது கடமைகளை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பது தெளிவுபடுத்தப் பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.

மெக்காவில் இணை வழிபாடு செய்த வந்தவர்கள் இப்ராஹிம் நபியின் வழிமுறை யினராதலால், தொழுகை, நோன்பு, ஹஜ் இவற்றை நடை முறைப்படுத்திக் கொண்டிருந்தனர். முஹம்மத் நபியுடைய காலத்தில் சலாத், ஜகாத் முதலிய வார்த்தைகளுக்குரிய அர்த்தத்தை மக்கள் அறிந்திருந்தனர். அல்லாஹ் அருளிய குர்ஆன் அவர்களுடைய மொழியில் அமைந் திருந்தது. சிலவற்றிற்குப் புதிய வார்த்தைகளை அல்லாஹ் கட்டளை யிடவில்லை . (16:103, 26:195) மக்களுக்கு நன்கு பரிச்சயமில்லாத சில விஷயங்களை அல்லாஹ் கட்டளையாக்க விரும்பிய போது, அவற்றை விவரித்துக் கூறும் பொறுப்பையும் ஏற்றுக் கொள் கின்றார். உதாரணமாக, (யவ்மி) த்தீன்' என்ற அரபு வார்த்தை வசனம் 1:4ல் கூறப்பட்டுள்ளது. இதன் விளக்கம் (82:15-19)ல் விவரித்துக் கூறப்படுகிறது. மக்களால் ஏற்க னவே நன்கு அறியப் பட்டிருந்த சில செயல் முறைகள் பற்றி மீண்டும் விவரிக்கப் பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. தொழுகையின் ரக்அத்கள் குறித்து எந்த விதமாக தர்க்கமும் அங்கே நடைபெற வில்லை. இதுவே, தொழுகை புனிதமாகப் பாதுகாக்கப்பட்டு வருவதை உண்மையாக்கி வைக் கிறது. மேலும் இன்று வரை ஐவேளைத் தொழுகையில் பர்ளுத் தொழுகை ரக்கத்களின் எண்ணிக்கை மாற்றப் படவில்லை என்பதும் உண்மையாகும். உருமாற்றம் செய் யப்படும் விஷயங்களை மட்டுமே குர்ஆன் விவரிக்கிறது.

மனித ஒட்டியே சமுதாயத்தின் வளர்ச்சியை ஏட்டிலே வேதங் களின் வளர்ச்சியும் இருக்கின்றது என்பதை, முன்னர் நாம் விரிவாக அறிந்தோம். ஏற்கனவே கற்றுக் கொடுக்கப்பட்டு நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கும். பழக்க வழக்கங்களை மீண்டும் மீண்டும் கற்றுக் கொடுக்கத் தேவை என்ன இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? சிந்தித்து அறியக் கூடிய மக்களுக்கு குர்ஆனில் நிறைய படிப்பினைகள் இருக்கின்றன. மேலும் இறைவன் குர்ஆனை ஆராய்ந்து பார்க்கும் படிக் கட்டளையிடுகின்றார். (38:29) எனவே ஒவ்வொரு உண்மையான இறை நம்பிக்கையாளரும் குர்ஆனை ஆழ்ந்து சிந்தித்து உண்மைகளை உணர்ந்து கொள்ள முயற்சி செய்வோமாக.

★ ☆ ★

# தூதர்களிடையே வேற்றுமை

தூதர்களுக்கிடையில் பிரிவினை உண்டாக்குதல்:

தூதர்களுக்கிடையில் எந்த வேறுபாடும் காட்டாதீர்கள் என்று அல்லாஹ் நமக்குக் கட்டளையிடுகின்றார் (2:285). இறை நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வுடைய கட்டளைக்கு, "நாங்கள் செவியுற்றோம் மேலும் நாங்கள் வழிப்பட்டோம்", என்று கூறுவார்கள். ஆனால் அவற்றைத் திறமையாகத் திரித்துக் கையாள்பவர்கள், 'நாங்கள் செவியுற்றோம் எனினும் நாங்கள் மாறு செய்வோம்", (4:46) என்றே கூறுவார்கள். அல்லாஹ் அவருடைய தூதர்களுக்கு வெவ்வேறு பதவிகளைக் கொடுத்து ஆசீர்வதிக்கின்றார். 2.253ல் சில உதாரணங்களைக் கூறியிருக்கிறார். 'அவர் மூஸாவுடன் நேரடியாகப் பேசி யதாகவும், ஈஸாவுக்குத் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்து பரிசுத்த ஆவியைக் கொண்டு உதவியும் செய்தாகவும். 17:55ல் தூதர்களில் சிலரை மேன்மையாக்கி வைத்ததாகவும், தாவூதுக்கு ஜபூர் வேதத்தையும் கொடுத்ததாகவும் அல்லாஹ் கூறுகின்றார். ஆனால், எல்லா தூதர்களை விடவும் முஹம்மது நபியை மேன்மையாக்கி வைத்ததாக அல்லாஹ் குறிப்பிடவில்லை. 2:285ல் குறிப்பிட்டபடி தூதர்களின் பதவிகளை வைத்து அவர்களை வரிசைப்படுத்த நமக்கு அல்லாஹ் அதிகாரமளிக்கவில்லை . தூதர்களை வழிபாடு செய்பவர்களே அவர்களை வரிசைப்படுத்துவதில் இடையறாது தொடரும் தர்க்கத்தில் ஆழந்து விடுகிறார்கள்.

**தூதர்களை வரிசைப்படுத்துவதில் ஷைத்தான் உண்டாக்கும் போட்டி!**

இறுதி நபிதான் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர் என்று நீங்கள் கூறினால் வேறு சிலர் முதல் நபிதான் இதற்கு தகுதியானவர் என வாதிடக் கூடும்! இன்னொருவர் ஈசா நபிதான் நபிமார்களில் உயர்ந்தவர் என்பதாக அவருடைய பிறப்பின் அதிசயத்தை கொண்டும் (19:19) அவர் அல்லாஹ்வின் வார்த்தையாக இருக்கிறார் என்பதைக் கொண்டும் (4:171) பிறந்ததிலிருந்து நபியாக இருக்கிறார் என்பதைக் கொண்டும் (19:30) அவரின் - எண்ணற்ற அற்புதங்களான அல்லாஹ்வின் அனுமதி கொண்டு இறந்தவர்களை உயிர்ப்பித்தார் (3:49) என்பதைக் கொண்டும், தூதர்களில் சிலரை, சிலரைவிட மேம்படுத்தியிருக்கிறோம் (2:253) என்ற வசனத்தைக்காட்டி வாதிடக்கூடும்! மற்றொரு நபர்

மூஸாதான் உயர்ந்தவர் என்று அதே 2:253 வசனத்தைக் கொண்டும் இறைவனிடம் பேசிய (4:164) நபி இவர்தான் என்றும் கூறி வாதிடலாம்! தாவூது நபிதான் தூதர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவர் என்ற வாதத்தை 17:55 வசனத்தின் அடிப்படையில் கூறினால் நீங்கள் என்ன செய்வீர்கள்? இன்னொரு வர், இப்றாஹீம் நபியை அல்லாஹ் வுடைய தோழர் (4:125) என்ற வசனத்தைக் காட்டி, முஹம்மது நபியே, இப்றாஹீம் நபியைத்தான் பின்பற்றுமாறு கட்டளை யிடப்பட்டுள்ளார் (16:123) என்றும் கூறி, அவர்தான் உயர்ந்தவர் என்றுரைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

இன்னும் ஒருவர் வந்து, முஹம்மது நபிக்கு கண்ணியமிக்க அந்தஸ்து கொடுக்கப்பட்டாலும் (17:79) படலாம். ஆனால் இத்ரீஸ் நபிக்கு உயர் கண்ணியமிக்க அந்தஸ்த்தை அல்லாஹ் கொடுத்து விட்டார் (19:57) என்று கூறி இத்ரீஸ் நபிதான் உயர்ந்தவர் என வாதிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

மற்றொருவர்; குர்ஆனில் தூதர்களின் பெயர் குறிப்பிடப்படும் எண்ணிக்கையைக் கொண்டு மூஸாவை முதல் இடத்தில் (136 முறை ) இப்றாஹீமை இரண்டாவது இடத்திலும் (69 முறை) முஹம்மதை (4 முறை) 19 அல்லது 21வது இடத்திலும் வைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

முஹம்மது நபி, நபிமார்களில் சிறந்தவர் என்று காட்டுவதற்காக அதிகமான ஹதீதுகள் இட்டுக் கட்டப்பட்டுள்ளன இருந்தாலும் அல்லாஹ், முஹம்மத் நபிக்கு எந்த விதமான அற்புதங்களையும் கொடுக்கவில்லை என்று குர் ஆன் வசனங்களில் தெரியப்படுத்துகிறார் (29:51; 17:59), குர் ஆனை ஒப்புக் கொள்ளாதவர்கள் நூற்றுக் கணக்கான அற்புதங்களை அவர் செய்து காட்டினார், ஈஸாவையும் மூஸாவையும் போலவே என்கின்றனர்.

வஞ்சப்புகழ்ச்சியாக, முஹம்மது நபியை வழிபடுபவர்கள், சில சமயங்களில் புருவத்தை அழகுபடுத்த எண்ணி கண்ணையே பிடுங்கி விடுகிறார்கள். அதாவது, புகாரியின் பல ஹதீதுகளில் முஹம்மத் நபி, இடக்கைப் பழக்கம் உள்ள ஒருவர் இடக்கையினால் உணவு உட்கொண்டதையும், அவர் தொழுது கொண்டிருக்கும் போது, முன்னால் கடந்து சென்ற ஒரு சிறுவனை முடமாகிப் போகும் படியும் சபித்ததாக கூறுகின்றனர். மேலும் நபியின் திருமண உறவு சம்பந்தமாக அவர்கள் ஜோடனை செய்த கதைகள் நபியையும் அவர் மனைவிகளையும் இழிவு படுத்து வதாகவும் முட்டாள்தனமாகவும் இருக்கின்றன. நபி மிஃராஜ் இரவு பற்றிய கதைகள் இன்னும் சுவாரஸ்யமாக நபியை அவமானப்படுத்துகின்றன. அவர்

மிஃராஜ் சென்று அதிகமான தொழுகைகளைப் பெற்று வந்தார் என்றும் அவருக்குத் தனது உம்மத்தினர் 50 நேரத் தொழுகை களைத் தொழச் சக்தி பெற மாட்டார்கள் என்று தெரியாமல் மூஸாவின் அறிவுரை. கேட்டு மீண்டும் மீண்டும் மேலும் கீழுமாகச் சென்று 5 முறை மூஸாவுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் நபி சென்று வந்தார்கள் என்றும் கூறு கின்றனர். ஆதம் நபியிலிருந்து முஹம்மது நபிவரை அவருடைய தலைமுறையில் ஒருவரும் இறை நிராகரிப்பாளராக இல்லை என்றும், அவர்களுடைய பொய்களை நியாயப்படுத்தும் விதமாக, ஆஸர், இப்ராஹீமுடைய தந்தையில்லை என்றும் கூறுகின்றனர். (6:74). அவர்கள் முஹம்மத் நபி நபிமார்களில் உயர்ந்தவர் என்பதை நிரூபிக்க, பலவாறு புனைகின்றனர். அவர் ஒளியினால் படைக் கப்பட்டவர், அவருக்கு நிழல் இல்லை , அவருடைய உடல் கப்ரில் அழியாதது, அல்லாஹ் உலகங் களைப் படைப்பதற்கு முன்பாகவே அவரைப் படைத்து விட்டார், மறுமை நாளில் அவருக்கு மிக உயர்ந்த அந்தஸ்தில் அதிகாரம் அளிப்பார். இவ்வாறு மேலும் பல.

**அவர்களின் பொதுவான மனோ பாவம்**

இணைத் தெய்வ வழிபாடு செய்பவர்கள் அனைவரும் அவர்களுடைய இணைத் தெய்வங்கள் அல்லாஹ்வுடைய தண்டனையிலிருந்து தங்களைக் காப்பாற்றுபவை என்றே பொதுவான நம்பிக்கை கொள்கின்றனர். (2:123; 254; 6:70, 94; 7:53; 10:3, 39:44; 43:86; 74:48; 82:17-19) பதிலுக்கு அவர்கள் இரவும் பகலும் அல்லாஹ்வைப் புகழ்ந்து (33:42; 76:25). மேலும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து கொண்டிருப்பதை விட்டு (3:41, 191; 73:8;4:103), எப்போதும் தங்களுடைய தெய்வங்களைப் புகழ்ந்து கொண்டிருந்தால் அவர்களுடைய சிபாரிசுக்கு உத்தரவாதம் உண்டு என்றும் நம்புகின்றனர். சில சமயங்களில், அல்லாஹ்வுடைய பெயர் கூறப்பட்டால், பயபக்தியுடன் புகழ் கூறி நினைவு கொள்ளாத வர்கள், தங்கள் இணைத் தெய்வத்தின் பெயர் கூறப்பட்டால் உடனே பயபக்தியுடன் புகழ்ந்து நினைவு கூர்ந்து கொள்வர். இவ்வாறு

## தூதர்

முஹம்மது நபி இறுதி தூதர் அல்ல என்ற கருத்தை தொனிக்கும் வசனங்களான 3,81, 33:7, 33:40 ஆகிய ஒரே கருத்தைக் கூறும் வசனங்களின் அத்தியாய எண்களும், வசன் எண்களும் வரிசையாக எழுதப்பட்டால் 19ன்பெருக்குத் தொகையே.
3813373340=19X200703860

புகழ் கூறாத உண்மை விசுவாசிகளை இவர்கள் குறை கூறி அவர்களை விசுவாசிகளில்லை என்றும் குற்றம் சுமத்துகின்றனர்.

**முஹம்மதியர்கள் அவர்களுடைய போதனைகளுக்கு அவர்களே வேறுபடுவது:**

முஹம்மது நபி மிகவும் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர் என்று கூறினாலும் அதற்கு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட ஹதீது களையும் கூறுகின்றனர். உதாரண மாக, 'நான் இப்ராஹிமை விட அதிகமான சந்தேகத்தில் இருக்கி றேன் (புகாரி 60/1). யூசுப் நபிக்குப் பதிலாக நான் அழைக்கப்பட்டி ருந்தால் நான் அவ்வழைப்பை மறுத்திருக்க மாட்டேன். (புகாரி 60/ 11,19. யூனுஸ் நபியை விட மேலான இடத்தில் என்னை அமர்த்தாதீர்கள். தூதர்களுக் கிடையில் பிரிவினையை உண்டு பண்ணாதீர்கள் (புகாரி 65/4, 5; AB. ஹன்ப ல் 1/205, 242, 440, 2/ 405, 451, 468)

இவ்வாறான ஹதீதுகளைப் புறக்கணித்து விட்டு 'நான் ஆதமுடைய மக்களில் உயர்ந்த பதவியில் உள்ளேன். - உயிர் கொடுத்து எழுப்பப்படும் நாளில் நானே முதன் முதலில் எழுப்பப் படுவேன் (ஹன்பல் 1/5; 5/540, 388). எனும் ஹதீதிலேயே நின்று விடுகின்றனர்.

**வார்த்தைகளின் அர்த்தத்தைத் திரித்துக் கையாளுதல் :**

முஹம்மதியர்கள் 2:285ன் அர்த்தத்தைத் திரித்துக் கையாளுகின் றனர்.. 2:285 தூதர்களுக்கிடையில் பிரிவினை உண்டாக்கக் கூடாது என்று நமக்குக் கட்டளை யிடுகின்றது. "தூதர் தம் இறைவ னிடமிருந்து தமக்கு அருளப் பெற்றதை மெய்யாகவே விசுவாசிக்கிறார். விசுவாசிகளும் யாவரும் அல்லாஹ்வையும், அவருடைய மலக்குகளையும் அவருடைய வேதங்களையும், அவருடைய தூதர்களையும் விசுவாசிக்கின்றனர். தவிர, "அவருடைய தூதர்களில் எவர் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்ட மாட்டோம்" மேலும் நாங்கள் செவியுற் றோம்; நாங்கள் வழிப்பட்டோம்; எங்கள் இறைவனே! நாங்கள் உனது மன்னிப்பைக் கோருகின்றோம்! - உன்னிடமேதான் சேர வேண்டிய திருக்கின்றது." என்றும் கூறுகின்றார்கள் (2:285)

آمَنَ الرَّسُوْلُ بِمَآ اُنْزِلَ اِلَيْهِ مِنْ رَّبِّهٖ وَ الْمُؤْمِنُوْنَ

كُلٌّ اٰمَنَ بِاللّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ لَا نُفَرِّقُ

بَيْنَ اَحَدٍ مِّنْ رُّسُلِهٖ وَقَالُوْا سَمِعْنَا وَاَطَعْنَا غُفْرَانَكَ

رَبَّنَا وَاِلَيْكَ الْمَصِيْرُ

முஸ்லிம் பண்டிதர்கள் இந்த வசனம் சில தூதர்களை

நிராகரிப்பதிலிருந்து நம்மைத் தடுக்கிறது என்றும், அவர்களை வரிசைப்படுத்துவதை விட்டு அல்ல, என்றும் கூறுகின்றனர்.

a) 2:285 விசுவாசிகள் அல்லாஹ் வின் தூதர்களை விசுவாசிப்பார்கள் என்று சுட்டிக் காட்டுகிறது. ஒரே கருத்தையே மீண்டும் மாறுபட்ட தோற்றத்தில் சுட்டிக் காட்டக் காரணம் என்ன? முதலில் கூறிய அதே அர்த்தத்தில்தான் அழுத்திக் கூறப் பட்டிருக்கிறது எனில், ஏன் மலக்குகளையும், வேதங்களையும் மீண்டும் குறிப்பிடவில்லை?

b . அல்லாஹ் எல்லாவற்றையும் அறிந்தவராக இருக்கிறார். மனிதர் களின் பலஹீனம் அவர்களைத் தூதர்களை வழிபடும்படி தூண்டி விடும் என்பதையும் அல்லாஹ் நன்கறிந்தே இருக்கிறார். எனவே இவ்வசனம் தூதர்களைக் கொண்டு மக்கள் போட்டியிடுவதை தடுக்க அல்லாஹ்வின் நினைவூட்டலாக ஏன் இருக்கக் கூடாது.

c . தூதர்களை சொர்க்கத்தில் அவர்களுடைய நிலையைக் கணித்து வரிசைப்படுத்த நம்மால் இயலாது. நம்முடைய கடமையும் இதுவல்ல. குர் ஆனின் எந்தக் க ட் ட ளை யா வ து தூதர்களுக்கிடையில் அவர்களுடைய நேர்மையில் வேறுபாட்டை நமக்கு வரிசைப்ப டுத்திக் காட்டுகிறதா?

d . கிறிஸ்தவர்கள் ஈஸாவே

## சிந்தனைக்கு

அடியானிட மிருந்து ரப்பு மிக்க நெருக்கமாக இருப்பது இரவின் கடைசி பகுதியிலாகும். திர்மிதி நஸயி 1/279 இது பொய் என்பதை குர்ஆன் கூறுவதை சற்று சிந்தித்துப் பாருங்கள், அல்லாஹ் கூறுகிறார். நான் அடியானின் பிடரி நரம்பைவிட மிக சமீபமாக இருக்கிறேன் என்று 50:16.

முஹம்மத் நபியை விட உயர்ந்தவர் என்று குர்ஆனை ஆதாரம் காட்டினால் (2:253; 4:171, 3:49. 19:19,30) எவ்வாறு இதனை மறுப்பீர்கள்?

e. முஹம்மத் நபி இப்ராஹிமின் வழி முறையில் வந்தவர். உங்கள் வரிசைப்படுத்தும் முறைப்படி, தலைவரை முதன்மைப்படுத்து வீர்களா? பின்தொடர்பவரை முதன்மைப்படுத்துவீர்களா?

f. முஹம்மத் நபி, தூதர்களில் அதிக அந்தஸ்து பெற்றவரல்லர் என்றும் இறை நம்பிக்கையாளர்கள் தூதர் களுக்கிடையில் பிரிவினை உண்டு பண்ணக்கூடாது என்றும், குர்ஆனை விட மேலாக நீங்கள் மதிக்கும் புகாரியில் குறிப்பிடப்படுகிறதே? இதை விட்டு விட்டு குர்ஆனுக்கு மாற்றமாகக் கூறப்படும் மற்ற விவரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவற்றை மட்டும் ஏன் ஒப்புக் கொள்கிறீர்கள்? ★

# இறைவன் நேர் செய்ததும் ஷைத்தான் மாறு செய்ததும்

உலகம் முழுவதிலும் இறையச்சமுடைய முஸ்லீம்கள், ஏறக்குறைய எல்லோருமே இறைவனின் கட்டளைகளுக்கு கீழ் படிந்து வாழ வேண்டும் எனவும், தங்களது வணக்க வழிபாடுகளில் சிறு தவறுகள் கூட ஏற்படாமல் முடிந்த மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் விரும்புகிறார்கள். பெருமளவு சிரத்தையுடன் நடக்கவும் செய்கிறார்கள். அவர்கள் விரும்புவது மிக்க ஏற்புடையதுதான் ஆனால் தாங்கள் சிரத்தையுடன் செய்யும் மார்க்கக் காரியங்கள் ஒவ்வொன்றும் இறைவனின் கட்டளைப்படி இருக்கிறதா? (42:21) இறைவன் வலியுறுத்தி தவிர்க்கக் கூறும் வரம்பு மீறிய குற்றத்தை செய்கிறோமா? என்று அஞ்சி தங்களது மார்க்கக் காரியங்களை சோதித்து சரிபார்த்துக் கொள்ள வேண்டும். (2:187)

மிகவும் சாமர்த்தியசாலியும், இறை வணக்கத்திற்கு மாறு செய்வதையே குறிக்கோலாகக் கொண்டவனுமான சைத்தான், நம்முடைய சிற்சில சிறிய காரியங்களுக்கு நல்ல பயன் பாடுகளும் நன்மைகளும் இருப்பது போல் காட்டி திருப்தி சொல்லச் செய்வான் (18:103-105) பின்னர் கடமையான மார்க்கக் காரியங்கள் ஒவ்வொன்றிலும் வரம்பு மீறுதல் மற்றும் இணை வைப்பு போன்றவற்றையும் புகுத்தி இறை வழிப்பாட்டையே கலங்கப்படுத்தி விடுவான் (36:60) கண்ணியமிக்க தூதர் முகம்மது நபி கூறியதாக அவர் மீது பழியைப்போட்டு நம்மை நம்ப வைத்து வரம்பு மீறுதலே ஒரு அழகான செயலாகக் காட்டி வழி கேட்டில் இட்டுச் சென்று விடுவான். (59:160

சூரா பாத்திஹாவில் எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக என்று இறைவனிடம் பிராத்திக்கிறோம். இறைவன் குர் ஆனைக் கொடுத்து இதனைக் கொண்டு நேர்வழி அடைந்து கொள்ளுங்கள் என்று அருள் செய்தால், இறைக்கட்டளை ஒவ்வொன்றுக்கும் அதிகமதிகம் செய்தால் அதிக நன்மை என்று சைத்தானின் கூற்றை ஏற்று வரம்பு மீறி இறை வழிகாட்டுதலில் தவறிழைத்து வழிகேட்டையும் இறைத் தண்டனையும் தேடிக் கொள்கிறோம். எந்த சமூகத்தாரும் தங்களை மாற்றிக்

கொள்ளாதவரை நாம் அவர்களை மாற்றுவதில்லை என்று இறைவன் கூறுகிறார். (வசனம் 13:11) இறைக்கட்டக்ளைகு கீழ்ப்படியவும், அவற்றை வரம்பு மீது செய்து இறைத் தண்டனைக்கு ஆளாகமல் இருக் கவும். இறைவனிடம் பிராத்திப் போம். நம்மாலான அனைத்து வழிகளிலும் முயற்சிப்போம் (2:187)

எந்தெந்த விதங்களில், எல் லாம் சைத்தான் நம்மை வரம்பு மீறச்செய்வான் என்பதை நாம் நன்கு அறிந்து கொண்டால் அவற்றை விட்டும் நாம் நீங்கிக் கொள்ளலாம் என்பதால் வரம்பு மீறல் சிலவற்றை கீழே கொடுத்திருக்கிறோம்.

1. ஆதம் நபி முதல் முகம்மது நபி வரை இறைவன் போதிக்குமாறு கட்டளை இட்ட' 'லாஇலாஹ இல்லல் லாஹ்" என்ற அடிப்படையான கலீமாவை முகம்மது நபியின் பெயரை இணைத்துக் கூறி கலீமாவில் இணை வைப்பை உண்டாக்கினான் (3:18, 63:1-2, 39:45)

2. எல்லா நபி மார்களையும் விட சிறந்த நபி என்று கூறி நபிமார்களுக்கு இடையில் வேதம் பாராட்டக்கூடாது என்ற இறைவச னத்திற்கு மாறு செய்தான் (2:285)

3. கடமையான தொழுகை 5 நேரம் என்ற இறைக்கட்டளை இருக்க உபரித் தொழுகைகள் என்ற பெயரில் சுன்னத், நபிள், மற்றும் இன்னும் பலப்பல தொழுகைகளை இணைத்து வரம்பு மீறச் செய்து தொழுவதை ஒரு பெரிய சுமை போல் ஆக்கி பெரும்பாலான முஸ்லீம்களை தொழுவதை விட்டே அப்புறப் படுத்திவிட்டான் (34:18, 19)

4. தியாயம் செய்வதற்காக (திக்ரு - Meditation) இரவின் கடைசிப் பகுதியில் எழுந்திருத்தல் என்ற அர்த்த முடைய 'தகஜ்ஜத்' என்ற இறைக் கட்டளையை தகஜ்ஜத் தொழுகை என்று மாற்றிக் கூறி மாறு செய்தான். (17:79, 74:1-7)

5. உ ங் க ளு டை ய தொழுகையில் அல்லாஹ்வை தவிர வேறு யாரையும் அழைக்காதீர்கள் என்ற இறைக்கட்டளைக்கு மாறாக இருப்பு நிலையில் ஸலவாத்து என்ற பெயரில் இபுறாஹிம் நபி, முகம்மது நபி ஆகியோர் பெயர் குறிப்பிட்டுக் செய்தும், அத்தவறியத்து என்ற ஒன்றை உண்டாக்கி இறைவனைத் தொடர்பு கொள்கின்ற தொழுகையில் முகம்மது நபியை முன்னிலைப் படுத்தி அழைத்து ஸலாம் கூறி தொழுகையையே பாழாக்கி விட்ட ன. (20:14)

6. உங்கள் தொழுகையில் அதிக சப்தமிட்டு ஓதாதீர்கள், மனதிற் குள்ளும் ஓதாதீர்கள் இரண்டுக்கும் மத்திமமான முறையில் ஓதுங்கள் என்று இறைக்கட்டளை இருக்க உரக்கத் சப்தமிட்டும், உரக்கத் மவுனமாகவும், சில வேளைகளில் பரக்கத்தும் மவுனமாகவும் மேலும் தனியாக தொழும் பொழுது

அனைத்திலும் மவுனமாகவும், ஓதிக் தொழுது வரம்பு மீறிச் செய்து விட்டான். (17:110)

7. கருத்து வேறுபாடுகளைத் பிரித்தரிவித்தல் வணக்க வழிபாடு, சரித்திரம் சட்டதிட்டங்கள் இன்னும் மனிதர்களுக்குத் தேவையான அனைத்தையும் கொண்டதான அல்குர் ஆனை இறைவன் நமக் களித்து நம்மை சிந்தித்து விளங்கி நேர் வழி பெற்றுக் கொள்ளச் சொன்னால். நாம் நம்முடைய தொழுகையில் சூரா பாத்தி ஹாவிற்குப் பின் துணை சூராக்கள் என்ற பெயரில் அளித்த இறைவனுக்கே திரும்ப ஓதிக்காட்டி வரம்பு மீறுகிறோம். மேலும் துணை சூராவை ஓதுவதன் மூலம் மாடு, பன்றி, மனிதர்கள் என்று இன்னும் ஏராளமான பெயர்களை அல்லாஹ் வைத் தொழும்பொது அழைத்து கட்டளைக்கு மாற செய்கிறோம். (6:111-116)


8. தொழுகை நேரம் குறிக்கப் பட்ட கடமை என்று இறைவசனம் இருக்க, பிரயாணம், தூக்கம், மறதி, முக்கிய அலுவல் காரணமாக தொழுகை நேரம் தவறிப் போனால் பரவாயில்லை , அதனை களாச் செய்தால் கட்டி விடும் என்று இறைக் கட்டளைக்கு மாறு செய்தான் (4:103)

9. தொழுகைக்குத் தயாரானால் தண்ணீர் கொண்டு ஒலு செய்து கொள்ளுங்கள். முகங்களைக் கழுவுதல். முழங்கை வரை கைகளை கழுவுதல், தலையை ஈரக்கையால் தடவுதல் மற்றும் கணுக்கால் வரை கழுவுதல் இவை நான்கும் ஒலுவின் வரம்புகள் என்று இறைவனின் கட்டளை இருக்க, வாய், மூக்கு, பிடறி, காது இன்னும் தோள் புஜங்கள் வரை கழுவுதல் என்றும், குண்டூசி முனை அல்லது ஒரு மயிரிழை அளவு தண்ணீரில் அப்பாகங்கள் நனையாவிட்டாலும் ஒலுவும், அதன் தொடர்பாக தொழுகையும் கூடாது என்று கூறி, இறைக் கட்டளையை மீறச் செய்தான். (5:6, 4:43)

மேற்கூறிய வரம்பு மீறல்களை ஒரு உதாரணத்திற்காக சிலவற்றைத் தான் குறிப்பிட்டுள் ளோம். ஹஜ், நோன்பு ஸக்காத், தலாக், இவை போன்ற அனைத்து விஷயங்களிலும் ஏராளமான வரம்பு மீறல்களை சைத்தான் நம்மீது சுமத்தியுள்ளான். (643-44) ஒவ்வொரு இறைக் கட்டளை யையும் தனித்தனியாக பாருங்கள், சிந்தியுங்க ள். (4:82, 7:204, 10:39, 18:27) குர்ஆனோடு ஒப்பிடுங்கள். 'ஃபுர்கான்' ஆகிய குர் ஆன் உங்களுக்கு இடையில் உள்ள கருத்து வேறுபாடுகளை பிரித்தறிவிக்கும், தெளிவாக்கும் சைத்தானிடம் இருந்து உங்களைப் பாதுகாக்கும்.

"அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதையே நாடுகிறார். உங்கள் மீது எந்த சிரமத்தையும் ஏற்படுத்த விரும்பவில்லை . (2:185)

★ ☆ ★



# குர்ஆனின் திறவுகோல்

நம்முடைய இறைவனாகிய அல்லாஹ் ( God - கடவுள்) எல்லா மக்களையும் குர்ஆனை படித்து அதைப் புரிந்து கொள்ள அனுமதிக்க வில்லை . காரணம் குர் ஆன் ஒரு சாமானியமான புத்தகம் அல்ல. இது இவ்வுலகிற்கு இறைச் செய்திகளைத் தாங்கிய இறைப் புத்தகம்.

இந்த குர்ஆன் கண்ணியம் மிக்கது (50:1) இந்த குர்ஆன் மகத்தானது (15:87) இந்த குர்ஆன் சங்கையானது விவரிக்கப்பட்டது (56:77 6:114)

أَفَغَيْرَ اللّٰهِ أَبْتَغِي حَكَمًا وَّهُوَ
الَّذِيْٓ أَنْزَلَ إِلَيْكُمُ الْكِتٰبَ مُفَصَّلًا
وَالَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَعْلَمُوْنَ
أَنَّهٗ مُنَزَّلٌ مِّنْ رَّبِّكَ بِالْحَقِّ فَلَا
تَكُوْنَنَّ مِنَ الْمُمْتَرِيْنَ ۝

மிகவும் பிரத்யேகமான மக்கள் மட்டுமே குர் ஆனுடைய செய்திகளை உணர்ந்து அதன் பயனைப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

குர்ஆனை ஏற்றுக் கொண்ட வராக நாம் ஆவதற்கு உள்ள வரம்புகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இப்போது 'குர் ஆனின் திறவுகோல்' பற்றி அறிந்து கொள்வோம். இந்த திறவுகோல் இல்லாமல் ஒரு மனிதன் குர்ஆனின் ஒரு வசனத்தையோ அல்லது ஒரு வார்த்தையையோ கூட நிச்சயமாக உணர்ந்து, புரிந்து அதன் பயனைப் பெற்றுக் கொள்ளவே முடியாது.

அரபி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் மேலும் அரபு மொழியின் மீது அதிகாரமும், உரிமையும் பெற்ற அறிஞர்களும் கூட குர்ஆனை புரிந்து கொள்வதை விட்டும் தடுக்கப்பட்டு உள்ளனர். குர்ஆன் அல்லாத மற்ற புத்தகங்களை புரிந்து கொள்ள முடிந்த பலரால் குர் ஆனை புரிந்து கொள்ள இயலவில்லை. காரணம் இறைவன் தாமே இந்த குர் ஆனை புரிந்து கொள்வதை விட்டும் அவர்களை தடுத்துள்ளார்.

நாம் குர் ஆனை அணுகு வதை அல்லாஹ்வுடைய மறைவான சேனைகள் கட்டுப் படுத்துகிறார்கள் எவர்கள் வசம் 'குர் ஆனின் திறவுகோல்' இருக்கிறதோ அவர்கள் மட்டுமே குர் ஆனை அணுகுவதற்கு அறிந்து, புரிந்து பயனடைவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்

**குர் ஆனின் திறவுகோல் என்றால் என்ன?**

குர்ஆனின் திறவுகோல் என்பது குர்ஆனை நம்புவது, குர் ஆன் முழுமையானது, குர்ஆன் நிறைவானது, குர் ஆன் முழு விளக்கமானது. மேலும் மார்க்க ஆதாரம் குர் ஆன் மட்டுமே என்று உறுதியாக நம்புவது (6:19, 38,114) இதுவே குர்ஆனின் திறவு கோலாகும்.

மேலும் மனிதர்களில் எவர்கள் குர்ஆன் அல்லாத வேறு எதையும் மார்க்க ஆதாரமாகக் கொள்கிறார்களோ, உதாரணமாக நபி அவர்கள் சொன்னதாகவும், செய்ததாகவும் பொய்யாக அவர்கள் மீது இட்டுக்கட்டிய பல செய்தி களையும் மார்க்க ஆதாரமாகக் கொண்டு செயல்படுகிறார்களோ அவர்கள் நிச்சயமாக ஒருபோதும் குர்ஆனை அணுகவும், புரிந்து அதன் பயனை பெற்றுக் கொள்ளவும் முடியாது. இதை அல்லாஹுத் ஆலா குர் ஆனில் சூரா 18ல் வசனம் 57ல் தெளிவாக குறிப்பிடுகிறார்.

குர்ஆனைப் பொறுத்த மட்டில், குர்ஆனை அணுகுவதற்கும் புரிந்து கொள்வதற்கும் 'மொழி'' என்பது சம்பந்தமில்லாத ஒன்றாகும். ஒரு மனிதன் அரபி மொழியில் ஒரு ''வார்த்தை ' கூட தெரியாத நிலையில் இருந்தாலும் அவரிடம் இந்த 'குர் ஆனின் திறவுகோல்' இருந்தால் அம்மனிதர் குர் ஆனை புரிந்து கொள்வது உறுதி. இதை அல்லாஹ் குர்ஆனில் (41:44) ல் குறிப்பிடுகிறார்.

**“இதை அரபி அல்லாத மொழியில் நாம் ஆக்கியிருந்தால் அவர்கள் ஏன் அந்த மொழியில் இறங்கியது என்று கேட்டிருப்பார்கள்! அரபியரோ, அது அல்லாத வரோ, கூறும்: நம்பிக்கை கொண் டோருக்கு இது நேர் வழிகாட்டியும், மருந்தும் ஆகும். ஆனால் இதை நம்பாதவர்களோ அவர்கள் இது குறித்து செவிட்டுத் தனத்திலும், குருட்டுத் தனத்திலும் இருப்பார்கள். மிக நீண்ட தொலை விலிருந்து அழைக்கப்படுபவர் போலாவார்கள்.” (41:44)**

☆ ☆ ☆

# அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் - ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.www.kadavulmattum.org

# SATAN THE MASTER HYPNOTIST

(Part II)

**PART - I WAS PRESENTED IN OCT. 1999 ISSUE**

**Characteristics of the master Hypnotists subjects**

Hypnotized people, those who fail to devote their worship to God Alone and uphold His word Alone, exhibit unusual behavior because they are completely out of touch with their own minds. They have submitted their mind and their will to Satan by setting up the words of men to rank with the word of God; they have set up their scholars and religious leaders as gods beside God (please see 9:109). They lose all contact with reality except through Satan's suggestions. It is a common phenomenon that we show someone clear Qur'anic assertions that Qur'an is :Complete, perfect, fully detailed, and shall be the sole source of religious guidance" only to discover that the person is totally helpless; unable to see or accept such Qur'anic truths.

When told, "You shall follow these revelations of God," they say, "No, we shall follow what we found our parents doing." (2:170 & 31:21)

It is now obvious that such persons have submitted themselves to Satan, the Master Hypnotist, and that he fully controls their mind, their eyes. and their hearing, Thus, they cannot think, see, or hear anything on their own. The Qur'an explains this strange phenomenon very clearly in 17:45 and 18:57. The invisible barrier mentioned in 17:45 is the hypnoisis inflicted upon those who refuse to believe Qur'an and submit to its truths.

Show below are eleven descriptions of versions under hypnosis (Hollander, B. "History and results of hypnotism." In search of the soal. New York: E.P. Dutton & Co., 281-296).

After each general description of a person's behavior under hypnosis. I will present specific examples of disbelievers' identical behavior in Qur'an.

(1) The subject raddily accepts the hypnotist's suggestions us fact or reality., He neither questions them nor the hypnotist.

If you obey the majority of people on earth, they will lead you away from the path of God. For they follow only conjecture (presented to

them as doctrine), and they only guess. (6:116)

(2) The subject has his own system of beliefs and ideas that fit the desires of the hypnotist.

We have appointed for every prophet enemies from among the human devils and jinn devils who invent lies made up of fancywords, and narrate them to each other, in order to deceive. Had your Lord willed, they would not have done it. You shall disregard them and their fabrications. (This is God's will) in order that **the minds of those who do not really believe in the Hereafter may listen thereto, readily accept such fabrications, and thus expose their true intentions. (6:112-113)**

(3) The subject can be made to forget his own identity, specific experiences, and whole periods of life.

Do not be like those who forgot God, so He let them forget their own selves. They are the wicked ones. (59:19)

(4) The subject can be made to believe he experienced something that he never really experienced or that never actually occured.

Do not be like those who say, "We hear", while they really do not, Indeed, the worst creatures in the sight of God are the deaf and dumb, who possess no common sense. (8:21-22)

(5) The subject may make false interpretations based on false premises conjured up on the hypnotice state. Outside efforts to correct his perceptions are useless as long as he is under hypnotic suggestion.

We control their minds and their visions as a consequence of their initial decision to disbelieve, and we keep them in their transgression blundering. (6:110)

Some of them may listen to you; but, can you make the deaf hear? They would never understand. Some of them maylook at you, but, can you make the blind see? They would never see. (10:42 43)

(6) A hypnotized person can be made to think a real experience is a dilusion.

We fully control the minds of the guilty. **This is why they can never believe in this (Qur'an);** just like their counterparts in previous generations. Even if we open up for them a gate into the heavens, though which they actually climb, they actually climb, they would say, **"Our eyes are dazed. This is an illusion. We have been duped by magic."** (15:12-15)

(7) Through suggestion, the hypnotist can influence and make the subject's senses .cease to

function normally. For example, a person with excellent vision can be told that he is blind, and he will be unable to see. THIS IS LIKE THE INVISIBLE BARRIER PLACED BETWEEN THE DISBELIEVERS' MINDS AND THE MOST OBVIOUS TRUTHS.

We have committed to Hell multitudes of jinns and humans. They have minds with which they do not understand, eyes with which they do not see, and ears with which they do not hear. They are like animals, no they are far worse - they are totally unaware. (7:179)

8) A hypnotized person can be active, responsive, and fully involved with an idea. However, the hypnotist can command the person to be non receptive to the real meaning of specific things.

The Master Hypnotist commands some of his subjects to pretend that they sincerely accept God's guidance in the Quran, while they really do the exact opposite.

Some of them listen to you, then as soon as they leave they ask those who were enlightened, "What did he just say?" God thus seals their hearts and, consequently, they follow only their opinions. (47:16)

9) A subject can be led to inflict pain on himself without feeling it, he can also become insensitive to any preexisting pain.

The Master Hypnotist dupes his victims into dismissing misfortune as "signs of piety" instead of tests and/or reminders to worship God alone. In keeping with their free choice, he also makes them blind to the severe spiritual injury they inflict upon themselves by rejecting God's assertions that the Quran is complete, perfect, and fully detailed. (6:19, 38 & 114).

If only they implored when our test afflicted them! Instead, their hearts were hardened, and the devil adorned their works in their eyes. (6:43)

10) When questioned about their incentives for acting out post hypnotic suggestions, subjects believe they act on their own and make up plausible excuses for their behavior. Some say they feel compelled to act a certain way.

They commit a gross sin, then say "We found our parents doing this and God has commanded us to do it. Say, "God never advocates sin. And you saying about God what you are not know?" (7:28)

The idol worshipers say, "Had god willed, we would not worship and idols besides Him, nor would our parents, Nor would we prohibit anything besides His prohibitions." Those before them have done the same. Can the messengers do anything but deliver the complete message? (16:35)

(Tobe continued)

# கேள்வி பதில்கள்

<u>கேள்வி-1</u>

- **சூரா5, வசனம் 114ல் அரபியில் 'அல்லாஹும்ம' என்ற வார்த்தை இடம் பெறுகிறது. இந்த வார்த் தையை ஏன் "Occurrence of God" ல் கணக்கிடப்படவில்லை . அல்லாஹ் என்ற வார்த்தை இத் தனை முறை குர்ஆனில் இடம் பெறுகிறது என்ற இடத்தில் இந்த வார்த்தை சேர்க்கப்படவில்லை. ஏன்?**

**எஸ்.காஜாமுகைதீன்**
சென்னை -89

<u>பதில்</u>

★ 'அல்லாஹ்' என்ற வார்த்தை மட்டுமே எண்ணிக்கையில் எடுக்கப் பட்டுள்ளது. மொத்தம் 2698 = 19x 1 4 2 'அல்லாஹ்' வேறு -அல்லாஹும்ம' என்பது வேறு.

<u>கேள்வி-2</u>

- **நபிமார்களும் தூதர்களும் ஏதாவது . அற்புதம் செய்தால் இறைவனின் துணை கொண்டு உடனடியாக செய்தார்கள். ஆனால் D r . ரஷாத் கலிஃபா அவர்கள் 19 என்ற கணித அமைப்பை கண்டு பிடிக்க குறிப்பாக சூரா 2ல் அலிஃப், லாம், மீம் என்ற மூன்று எழுத்துக்களின் கணித அமைப்பை மட்டும் கண்டு பிடிக்க தனக்கு "நான்கு ஆண்டுகள்' தேவைப் பட்டதாக Internet ல் கூறியுள்ளார். ஏன் இறைவனின் உதவி கொண்டு உடனடியாக இந்த கண்டுபிடிப்பை வெளியிடவில்லை. ஏன் பல ஆண்டுகள் தேவைப்பட்டன.**

எஸ்.காஜாமுகைதீன்
சென்னை -89

<u>பதில்</u>

★ இது அல்லாஹ்வை கேள்வி கேட் பது போல் உள்ளதல்லவா? அத்தாட்சி கள் அனைத்தும் அல்லாஹ்விடமே உள்ளன. முழு குர் ஆனும் ஏன் ஒரே தடவையில் வெளியாக்கப்பட வில்லை? அத்தியாயம் 74:30,31ல் உள்ள 19 எனும் அற்புதம் வெளிப் படுத்தப்பட ஏன் 1400 ஆண்டுகள் ஆயின? இவை எல்லாம் அல்லாஹ் வின் நாட்டப்படி நடக்கின்றன. இறைவன் மூஸாநபிக்கு அற்புதத்தைகொடுத்த பின்னரே தூதுத்துவத்தைப் பற்றிக் கூறச் சொன்னார். தூதர் ரஷாத் கலீஃபா 1974லேயே 19 பற்றி கூறி விட்டார். ஆனால் 1988ல்

தான், இறைவன் நாட்டப்படிதான், தூதர் என்பதை அறிவித்தார். தன்னு டைய தூதுத்துவத்தை எங்கு அமைப் பது என்பதை அல்லாஹ் நன்கு அறிவார். (6:124) அல்லவா?

<u>கேள்வி - 3</u>

- **லைலத்துல் கத்ர் 27 அன்று குர்ஆன் இறங்கியதாக ரஷாத் கலிஃபா அவர்கள் குர்ஆனின் கீழே குறிப்பு எழுதியுள்ளார். (என்னிடம் குர் ஆன் இல்லை ) இந்த விபரம் குர்ஆனில் இல்லை. ஆனால் ரஷாத் கலிஃபா அவர்கள் அறிவிக்கிறார்கள். இப்பொழுது இந்த இடத்தில் சிந்திக்கும் போது இது ரஷாத் கலிஃபா அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் மாதிரி தெரிகிறது அல்லவா? குர்ஆனில் இல்லாததை எப்படி இவர்கள் அறிவிக்கிறார்கள்.**

**எஸ்.காஜாமுகைதீன்**
சென்னை -89

<u>பதில்</u>

★ நிச்சயமாக இது ஹதீஸ் ஆகாது அத் 72:24-28ன் படி இறைவன் மறைவானவற்றை தூதருக்கு அறிவித் துக் கொடுப்பார். மேலும் முன்னர் நடந்தவற்றையும், பின்னர் நடப்பவற்றையும், குறிப்பான செய்திகளையும் தூதருக்கு அறிவித்துக் கொடுப்பார். மேலான கூட்டத்தாரின் தர்க்கம், படைப்பின் நோக்கம், இப்றாஹிம் நபியின் கனவில் சைத்தான்-இன்னும் ஏராளமான குர்ஆனில் உள்ள விஷயங்களை இறைவன் கட்டளைப்படி அறிவிப்பவராக இருக்கிறார்.இன்ஷா அல்லாஹ் வரும் இதழ்களில் அவற்றை விரிவாகப் பார்ப்போம். மேலும், இவற்றை எல்லாம் அவர் தன் கைப்பட புத்தகங்கள், ஆடியோ, வீடியோ, கம்ப்யூட்டர் ஆகியவற்றில் பதிவு செய்து வைத்துச் சென்றுள்ளார். அவை சிடியிலும் பதியப்பட்டு பாதுகாக்கப்பட்டுள் ளது. அவருடன் வாழ்ந்தவர்கள் இன்றும் உள்ளனர். நபியின் ஹதீஸ்கள் எனச் சொல்லப் படுபவை அவ்வாறல்ல. அவை நபி இறந்து சுமார் 200 ஆண்டுகள் கழித்து, ஆயிரக்கணக்கான முரண்பா டுகளுடன், யூகத்தின் அடிப்படை யிலும், அவருக்கு அவர் கூறினார். இவருக்கு அவர் கூறினார் என்று எழுதப்பட்டவையாகும். மேலும் நபி எழுதியதாக, எழுதச் சொன்னதாக ஒன்றைக்கூடக் காண முடியாது என்பதையும் அறிய முடியும். மேலும் தூதர் கூறினாலும் குருட்டுத் தனமாக அவற்றை நம்பாமல் அவர் என்ன கூறுகிறார் என்பதை நன்கு சிந்தித்து விளங்கிக் கொள்ள வேண்டும் என்றே நாங்கள் கூறுகி றோம். எந்த ஆதாரத்தின் அடிப்படை யில் அவர் கூறுகிறார் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். மேலும் இவ்விஷயம் 19 எனும் ரகசிய கணிதக் குறியீட்டின் மூலம் 27ம் நாள் தான் என உறுதிப் படுத்தப்படுகிறது. (உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் தூதர் 3:81) இவ்விபரம் பற்றி நமது ஜனவரி இதழில் விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது.

★ ☆ ★

# எளிய உண்மைகள்

குர்ஆனைப் போலவே குர் ஆனுடைய அற்புதக் கணிதக் குறியீடும் மிக எளிமையாகவும், அதே நேரம் ஆழ்ந்த சிந்தனை தேவைப்படக்கூடியதாகவும் விரிந்துள்ளது. இங்கே கூறப்பட்டுள்ள மிக எளிய உண்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ள நமக்கு எந்த கருவிகளும் தேவையில்லை. விரிவான அமைப்புடைய உண்மைகளை அறிந்து கொள்ள ஒரு கால்குலேட்டரோ, அல்லது கம்ப்யூட்டரோ தேவைப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள உண்மைகளை சரிபார்த்துக் கொள்ள எந்த கருவிகளும் தேவையில்லை.

1. குர்ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம்பெறும் அரபி எழுத்துக்கள் ....................................................19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114= ..................................19x6
3. 'பிஸ்மில்லாஹ்' குர்ஆனில் 114 முறை உள்ளது 114 ......................19x6
   (சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30
   ஆக 27+30=57.....................................................................19x3
4. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம்பெறும் சூராவான 27 வரை கூட்டினால்
   (9+10+11... 27) வரும் கூட்டுத்தொகை 342 ..................................19x18
5. இதில் முக்கிய விஷயம் என்னவென்றால் இருமுறை பிஸ்மி இடம்பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம் பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக
   அதே 342 =......................................................................... 19x18
6. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம்பெறும் வார்த்தைகள் சரியாக .....................................................................19
7. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம்பெறும் எழுத்துக்கள் சரியாக 76...............................................................19x4
8. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம்பெறும் வசனங்கள்.................................................................19
9. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304...........................19x16
10. இறுதி வஹீயான சூரா 110ல் இடம்பெறும் வார்த்தைகளும் சரியாக ..........................................................................19
11. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில் முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன.........................19x2
12. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70, 80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000, 50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ........................................................19x8534

# வாசகர்கள் கடிதம்

மதிப்பிற்குரிய, புதிய நினைவூட்டல் மாத இதழ் ஆசிரியர் அவர்களுக்கு,
அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

தங்களின் மாத இதழ்களில் சிலவற்றை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இதர இஸ்லாமிய இதழ்களை விட மிகவும் வித்தியாசமாகவும், அறிவியல் ரீதியான அற்புத கருத்துக்களும், எல்லாவற்றையும் விட திருக்குர்ஆனை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை மற்றும் வணக்க வழிபாடுகளை அணுக கூடிய நவீனமான முறை என்னை மிகவும் கவர்ந்த து.

மேலும் நான் ஒரு ஆசிரியை. அத்துடன் இஸ்லாத்தின் சரியான வழியை புரிந்து செயல்படவும், பிறருக்கு அதை புரிய வைக்கவும் அதீத விருப்பமுள்ளதால், பல மார்க்க சம்மந்தமான சந்தேகங்களுக்கு திருக்குர் ஆனை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நவீன, விஞ்ஞான ரீதியான விளக்கத்தையும், தெளிவையும் பெற விரும்புகிறேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் உண்மையை உணர்ந்து செயல்படச் கூடிய கூட்டத்தில் நம் அனைவரையும் ஆக்கி, வெற்றியை அருள்புரிவாராக!

Y.மும்தாஜ், கோயம்புத்தூர்

புதிய நினைவூட்டல்" கவர்ந்ததே என்னை - அது புதுமைப் புரட்சிக் கருத்து(க்)கள் விளைந்திடும் பண்ணை ; மதுமலர்த் தேன்சுவை தரும் நல்லேடு - நம் மதிநெஞ்சம் கவர்ந்திடும் தீன்நெறிப் பூக்காடு!

கவிராயர் கே.எஸ்.அப்துர்ரஹ்மான்
சென்னை - 14.

I am Vivekanandan Aged 28. I read the Oct.'99 issue of Tamil Monthly "Puthiya Ninaivootal" Published by you and found that it emphasised the need for Muslims for following the Quran only, not the Hadid news which are mostly false and fabri cated. I think "Puthiya Ninaivootal" shows the right path to the true believer in God.

Though I'm a Hindu | be lieve in the oneness of God and that worship is due to God alone. I also believe that Mohammed was a messenger and prophet of God and that Quran was revealed by God as I equally believe in all other messengers and prophets of God and all the scriptures and religios given by God.

I request you to kindly send me the said Magazine and oblige.
Thanking You

K.Vivekanandan, Chennai10.

(முன் அட்டை தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| g. | இஸ்லாத்தின் முதல் தூணான ஷஹாதத்தில் நபி பெயரைச் சேர்த்தது. | 3:18; 37-35; 39 45 |
| 9. | முஹம்மது நபியை ஒரு கொடுமையான மனிதராக சித்தரித்து இழிவு செய்வது: | |
| a. | மனிதர்களின் கண்களை நோண்டி எடுக்குமாறு தண்டனை விதித்ததாக கூறுகிறார்கள். | 3:159; 68:4 |
| b. | முப்பது ஆண்களின் ஆண்மையை அவர் பெற்றிருந்ததாக கூறுவது. | 18:110; 25:20 |
| 10. | ஈசா நபி திரும்பி வருவார் என் போதித்து முஹம்மது இறுதி நபி என்ற உண்மையை செல்லாமலாக்குவது. இதன் மூலம் ஈசாதான் இறுதி நபி ஆகிறார். | 33:40 |
| 11. | ஏராளமான தடைகள் கொண்ட வழக்கத்தில் இல்லாத உணவு கட்டுபாட்டு முறை | 6:145-150; 16:115-116 |
| 12. | புனித மாதங்களை முன்பின்னாக்குவது | 9:37 |
| 13. | கடமையான தர்மத்தை (ஜக்காத்) சிதைத்து அதைப் புறக்கணிப்பது | 6:141; பின் இணைப்பு -15 |
| 14. | பெண்களை அடக்குமுறை செய்து அவர்கள் தலையை மூடவேண்டும் என்றும், பொருத்தமில்லாத உடைகளை அணியச் சொல்வதும் அவர்களுக்கு திருமணம், விவாகரத்து, சொத்துரிமை போன்றவற்றில் அவர்களுடைய உரிமையை மறுப்பது. | 3:195; 4:19, 32; 9:71; 2:228 |
| 15. | ஒரு குரங்கோ, ஒரு நாயோ, ஒரு பெண்ணோ தொழுபவன் முன் சென்றால் அத்தொழுகை செல்லாததாகிவிடும் (ஹதீஸ்) என்று கூறி பெண்களை இழிவு செய்வது. | |
| 16. | தொழுகை முதல், தூங்குவது, நகம் வெட்டுவது வரை ஏராளமான சட்டங்களை உண்டாக்கியது. | 5:101; 42; 21; 2:67-71 |
| 17. | தங்கத்தையும், பட்டையும் ஆண்களுக்கு தடுத்தது. | 5:48-49; 7:31-32; 3:14 |
| 18. | கலை வடிவங்களையும், இசையையும் தடுத்தது. | 7:32; 34:13; 42:21 |
| 19. | ஒரு திமிங்கிலத்தின் மீது பூமி கட்டப்பட்டிருப்பதாக கூறி இஸ்லாத்தை நகைப்புக்கிடமாக்குவது (79:30; இப்னு கஸீர், கி.பி. 1200, பென்பாஜ் கி.பி. 1975) | |

முஸ்லிம்கள் அன்றாடம் செய்யும் வரம்பு மீறல்களுக்கு இவை ஒரு சில உதாரணங்களே ஆகும். எனவேதான் இறைவன் மெய்ப்பிக்கும் தூதரை அனுப்பி வைத்திருக்கிறார்.

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

**ஓர் உலகம்**
**ஓர்-இறை**
**ஒரே செய்தி**

Book - Post

To

*If undelivered Please return to*



SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662